# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 47 ○ 13.10.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ✉ ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்


## பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சி இறுதிக் கட்டத்தில்

## நீண்ட நேரக் கலந்தாய்வில்

ஆறு தமிழ்க் கட்சிகள்




## யாழ்.சர்வதேச விமான நிலைய பணியில் தமிழர்கள் புறக்கணிப்பு

தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அறிக்கை

## சனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலக்கு மின்னிதழுக்கு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்து

தொகுப்பு : சாதுரியன்

## சிங்கள வாக்குகளை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் பரப்புரைகள்

பூமிகன்

## முதுகெலும்பில்லாத தலைமைத்துவத்திற்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கு தயாரில்லை



மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் இலக்கு மின்னிதழுக்கு சிறப்புப் பேட்டி



## உளத்தை அழிப்பதுதான் பெரும் வாதை

தீபச்செல்வன்

# பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சி இறுதிக் கட்டத்தில்

## நீண்ட நேரக் கலந்தாய்வில் ஆறு தமிழ்க் கட்சிகள்

சனாதிபதித் தேர்தலை மையமாகவைத்து தமிழ்த் தேசியப் பரப்பிலே செயற்படும் 6 கட்சிகளை ஒருங்கிணைத்து பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சி இறுதிக்கட்டத்தினை எட்டியுள்ளது. சனாதிபதி வேட்பாளர்களிடத்தில் முன்வைப்பதற்காக தமிழ் மக்களின் அடைப்படைப் பிரச்சினைகள் மற்றும் உடனடி பிரச்சினைகள் ஆகியவற்றை பொதுவான கோரிக்கைகளை உள்ளடக்கிய ஆவணம் தயாரிக்கப்பட்டு ஆறு கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் பொது ஆவணத்தில் அக்கட்சிகளின் தலைவர்கள் கைச்சாத்திடவுள்ளனர். இதற்காக, யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்கு யாழில் உள்ள தனியார் விடுதியில் பொது இணக்கப்பாட்டு ஆவணத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு ஆரம்பமாகியுள்ளது. தற்போது வரை கூட்டம் நடைபெற்று வருவதாக எமது சிறப்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார். ஒப்பந்தத்திற்கு முன்னதாக

தொடர்ச்சி 3ம் பக்கம்....

# யாழ்.சர்வதேச விமான நிலைய பணியில் தமிழர்கள் புறக்கணிப்பு

## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அறிக்கை

2009க்குப் பின்னர் இலங்கை அரசானது தமிழர் தாயகத்தினை ஆக்கிரமித்து தமிழினத்தினை நலிவுறச் செய்யும் செயற்றிட்டங்களை வேகமாக முன்னெடுத்துக் கொண்டிருக்கையில் யாழ்.சர்வதேச விமான நிலையத்தின் அவசியத்தை உணர்ந்தாலும் அது, தாயக உறவுகளின் மீது மற்றுமொரு ஆக்கிரமிப்பு திட்டமாக இருந்துவிடக்கூடாது என்று தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பலாலி விமான நிலையத்தின் புனர்நிர்மான செயற்பாடுகள் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் யாழ்.சர்வதேச விமான நிலையம் என்று பெயர் மாற்றத்துடன் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இந்த விமான நிலையம் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை உத்தியோக பூர்வமான திறந்து வைக்கப்படவுள்ளது. குறித்த தினமன்று சென்னையிலிருந்து விமான நிலைய அதிகாரிகள், மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோரை உள்ளிடக்கிய 32பேர் கன்னிப்பயணத்தினை




மேற்கொள்ளவுள்ளனர். காலை 9.55இற்கு சென்னையிலிருந்து புறப்படும் முதலாவது விமானம் முற்பகல் 10.55இற்கு யாழ். சர்வதேச விமான நிலையில் தரையிறங்க வுள்ளது. தற்போது நடுத்தர விமானங்கள் தரையிறங்குவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 27ஆம் திகதி முதலே பெரும்பாலும் பயணிகள் விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வாரத்திற்கு ஏழு விமான சேவைகளை சென்னைக்கும், பலாலிக்கும் நடத்தவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக பலாலி விமான நிலைய ஓடுபாதை 950 மீற்றராக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள நிலையில் C—100 வகையைச் சேர்ந்த 72 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய விமானங்கள் இயக்கப்படவுள்ளன.

இரண்டாவது கட்டமாக ஓடுபாதையின் நீளம் 1.5 கி.மீற்றராக விரிவாக்கப்பட்ட பின்னர், 1800 மீற்றருக்கு தொலைவு வரை பயணிக்கக் கூடிய விமானங்களை தரையிறக்கக் கூடியதாக இருக்கும். மூன்றாவது கட்டமாக, இந்த விமான நிலையத்தின் ஓடுபாதை 2.3 கிலோமீற்றராக விரிவாக்கப்பட்டு, ஏ320—321 விமானங்களைத் தரையிரக்கக்கூடிய

தொடர்ச்சி 4ம் பக்கம்....

# இனப்படுகொலையை மறைக்கவா ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவி?

## தமிழ் புத்திஜீவிகள் கருத்து

நிலைமாற்றம், ஒருமைப்பாடு மற்றும் உள்ளார்ந்த குடியாட்சி ஈடுபாடு (STRIDE) திட்டத்தை இலங்கைத் தீவில் முன்னெடுப்பதற்கு இணைந்த நிதி உதவியாக 40 மில்லியன் யூரோக்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்துள்ளது. இவ்விடயம் குறித்து இலக்கு மின்னிதழிடம் தமிழ் புத்தி ஜீவிகள் கருத்து தெரிவித்தபோது... இலங்கையில் இடம்பெற்ற திட்டமிட்ட இனப்படுகொலைகளை மூடிமறைப்பதற்காக இந்த நிதி உதவியை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளதா என அவர்கள் காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளனர்.

நிதி அமைச்சின் திறைசேரியின் செயலாளர் கலாநிதி. ஆர்.எச்.எஸ். சமரதுங்க இந்த நிதி வழங்கும் உடன்படிக்கையில் சிறீலங்கா அரசாங்கம் சார்பாக கைச்சாத்திட்டிருந்தார். கடந்த புதன்கிழமை இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. சிறீலங்கா மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவின் தலைவர் தூங் லாயும் இதில் கலந்துகொண்டிருந்தார்.

இலங்கையில் நிலைமாற்றம், ஒருமைப்பாடு மற்றும் உள்ளார்ந்த குடியாட்சி ஈடுபாடு என்பவற்றை ஊக்குவிக்கும் வகையிலேயே இந்த நிதி உதவி வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. இது குறித்து தமது வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்திருக்கும் தமிழ் புத்தி ஜீவிகள், "ஜெனீவாவில் உடன்பட்ட விடயங்களில்



முன்னேற்றம் எதுவும் ஏற்படாத நிலையில், இவ்வாறான நிதி உதவியை வழங்குவதற்கான தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் எடுத்ததன் மூலம் இலங்கையின் பொறுப்புக்கூறலில் இருந்து நழுவிச்செல்வதை ஊக்கிவிப்பதாகவே உள்ளது எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பதுடன், "இது இனப் படு கொலையை மூடிமறைப்பதற்கே வழிவகுக்கும்" எனவும் காட்டமாக விமர்சித்துள்ளனர். ''ஐரோப்பிய ஒன்றியம் பொதுவாக

தொடர்ச்சி 4ம் பக்கம்....

# சனாதிபதி வேட்பாளர்களிடத்தில் உறுதிமொழி பெறுவது குறித்து சம்பந்தன் நழுவல்

சனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பு ஆதரிக்கும் வேட்பாளரிடத்தில் பெற்றுக் கொள்ளப்படவுள்ள உறுதிப்பாடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நழுவல் போக்கில் பதிலளித்துள்ளார். சனாதிபதி வேட்பாளர்களிடத்தில் நிபந்தைகளை விதித்து வாய்மூல அல்லது எழுத்துமூலமான வாக்குறுதிகளை பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிகளை மேற்கொள்ளுமா? என்ற கேள்விகள் வலுத்துள்ள நிலையில் கொழும்பு தமிழ் ஊடகமொன்று கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எமது நிபந்தனைகள் பற்றி தற்போது எவ்விதமான இறுதி முடிவுகளையும் எடுத்திருக்கவில்லை. எழுத்துமூலமாக நிபந்தனைகளைப் பெற்றுக்கொள்வதா? இல்லையா? என்பதை கூட்டமைப்பாக கூடியாராய்வோம். இந்த விடயத்தினை யாதார்த்தப்பூர்வமாக கையாள்வதற்கே முயற்சிப்போம் என்று குறிப்பிட்டார். இதேவேளை, சனாதிபதித் தேர்தலில் 35வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இதில், கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்துவதற்குரிய உத்தியோக பூர்வமான அணுகுமுறைகளை எந்தவொரு வேட்பாளருமே மேற்கொள்ளவில்லை என்றும் சம்பந்தன் கவலை வெளியிட்டுள்ளார்.

# தமிழர்கள் காணாமல் போகும் அவலம் தொடர்கிறது

**யாழின்.பிரபல பாடசாலை மாணவனை காணவில்லை : காவல்துறையில் முறைப்பாடு**

யாழ்ப்பாணம் உடுவில் பகுதியை சேர்ந்த அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் ஜனுக்சன் எனும் 16 வயதுடைய பாடசாலை மாணவனைக் காணவில்லை என சுன்னாகம் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயிலும் மாணவனே இவ்வாறு காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் முற்பகல் வீட்டிலிருந்து மருந்து எடுப்பதற்காகச் சென்ற மாணவன் வீடு திரும்பவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாணவன் நேற்று முன்தினம் காலை பாடசாலைக்குச் சென்ற நிலையில் தனக்கு உடல்நிலை சரியில்லை உடனேயே வீடு திரும்பிய நிலையில், மருந்து வாங்க சென்றபோதே காணாமல் போயுள்ளார். இதேவேளை குறித்த மாணவனின் தாயார் சமூர்த்தி உத்தியோகத்தராக உடுவில் பிரதேச செயலகத்தில் பணியாற்றி வருகின்றதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண விமான நிலைய திறப்பு விழா தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை



யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையத் திறப்பு விழாவை அரசியல்வாதிகள் தமது அரசியல் நலன்களை அடைவதற்காகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது. யாழ்ப் பாணம் அனைத்துலக விமான நிலையத் திறப்பு விழா வரும் 17ஆம் நாள் நடக்கவுள்ளது.

இதுகுறித்து யாழ்ப் பாணம் மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.சி.அமல்ராஜ் கருத்து வெளியிடுகையில், “தேர்தலுக்கான நாள் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த இடத்தை அரசியல்வாதிகள் எவரும் தமது அரசியல் நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்டால், அது தேர்தல் சட்ட மீறலாகக் கருதப்படும். எனவே, அவ்வாறு அரசியல் நலனைப் பெறுவதற்காக விமான நிலைய திறப்பு விழாவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.” என்று கூறியுள்ளார்.

2ம் பக்கத் தொடர்ச்சி....

சனாதிபதி வேட்பாளர்களிடத்தில் முன்வைக்கப்படவுள்ள நிபந்தனைகள் குறித்து கைச்சாத்திடவுள்ள கட்சிகளின் பிரதிநிதிகளுக்கிடையில் இறுதி ஆராய்வு நடைபெற்று வருகின்றது. யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் முன்னெடுப்பில் தயாரிக்கப்பட்ட கோரிக்கைகளை ஏகமனதாக ஏற்றுக்கொண்ட தமிழ்த் தேசியப் பரப்பில் செயல்படும் கட்சிகளான, இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி,(ஈ.பி.ஆர்.எல்.எப்), (ரெலோ), (புளொட்) ஆகிய ஆறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கைச்சாத்திடவுள்ளதோடு அக்கட்சிகிளின் தலைவர்களும் மற்றும் முக்கிய பிரதி நிதிகிளும் இறுதிக்கட்ட கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளதாக அறியமுடிகிறது.

ஏற்கனவே இதுகுறித்து நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு கட்சிகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சனாதிபதியிடத்தில் முன்மொழியப்பட வேண்டிய கோரிக்கைளை தனித்தனியாக பல்கலைக்கழக மாணவர்களிடத்தில் கையளித்திருந்தன. அதனையடுத்து அவை அனைத்தும் துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளுடன் வகைப்படுத்தப்பட்டு பொதுவான கோரிக்கைகளை கொண்ட ஆவணமாக மாணவர்களால் தயாரிக்கப்பட்டது. குறித்த பொதுக்கோரிக்கைகளை இறுதிசெய்வதற்காக கடந்த வியாழக்கிமை ஒன்று கூடிய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் இதில் பங்கேற்ற கட்சிகள், ஒவ்வொரு கோரிக்கைள் பற்றியும் விரிவாக ஆராய்ந்து சில திருத்தங்களுடன் ஏகமனதாக ஏற்றுக்கொண்டன. இவ்வாறு இறுதிசெய்யப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் கட்சித் தலைவர்களின் கையொப்பத்துடன் உத்தியோகப்பூர்வமாக வெளி—யிடப்படவுள்ளது. இச்செய்தி இறுதி செய்யப்படும் வரையில் கட்சிப் பிரதிநிதிகளுக் கிடையிலான கலந்தாய்வு மூன்று மணிநேரத்தினையும் கடந்து நடைபெற்று வந்து கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கோத்தாவின் அறிவிப்பு

சிறீலங்காவில் புதிய சனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் பிரச்சாரங்கள் ஆரம்பமாகி இருக்கும் அதே வேளை, சிங்கள மக்களை திருப்திப்படுத்தும் வகையில் இரு பிரதான வேட்பாளர்களும் தமது பரப்புரைகளை முன்னெடுப்பதே காணக்கூடியதாக இருக்கின்றது. புதன்கிழமை அனுராதபுரத்தில் தன்னுடைய பரப்புரையை ஆரம்பித்த பொது ஜன பெரமுன சனாதிபதி வேட்பாளர் கோதாபய ராஜபக்ச தான் பதவிக்கு வந்த 24 மணி நேரத்திற்குள் தடுப்புக்காவலில் உள்ள படையினர் அனைவரும் விடுதலை செய்யப்படுவார் என்ற அதிரடி அறிவிப்பை வெளியிட்டார்.

சிங்கள மக்களின் திருப்தியையும், படையினரின் பாதுகாப்பையும் இலக்காகக் கொண்டதாகவே இந்த உரை அமைந்திருக்கின்றது. போர் வெற்றியை முன்னிலைப்படுத்திய பிரச்சாரங்களில் இராணுவத்தை பாதுகாப்பது என்பதும் முக்கியமானது. சிறீலங்காவின் இராணுவம் எந்த அளவுக்கு மனித உரிமை மீறல்களும், இனப்படுகொலைகளில் சம்பந்தப்பட்ட ஒன்று என்பதும் அனைவருக்கும் தெரிந்தது. ஆனால், அவர்களைப் பாதுகாப்பது சிறீலங்காவின் அரசாங்கங்கள் அனைத்துக்குமே முன்னுரிமைக்குரிய விடயங்களாக உள்ளன. தற்போது வலில் உள்ள சுமார் 15 வரையிலான படையினர் கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் இடம்பெற்ற படுகொலைகள், கடத்தலுடன் சம்பந்தப்பட்டவர்கள். பிரபல சிங்கள ஊடகவியலாளர்கள் லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட போன்றவர்கள் கொடூரமாக கொல்லப்பட்டதும் பின்னணியிலேயே இவர் கைது செய்யப்பட்டனர். அதனைவிட தமிழ் இளைஞர்கள் 11 பேர் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட சில படையினரும் தடுப்புக்காவலில் இருக்கின்றார்கள்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் உள்ளன. மனித உரிமை அமைப்புக்களினதும், சர்வதேச சமூகத்தினதும் கடுமையான அழுத்தங்களே இவர்கள் கைதாகி காவலில் வைக்கப்படக்காரணம். இவர்களைத்தான் பதவிக்கு வந்த 24 மணி நேரத்திற்குள் விடுதலை செய்யப்போவதாக கோதாபய அறிவித்திருக்கிறார். அவருடைய அறிவிப்பு இரண்டு நோக்கங்களைக் கொண்டது. ஒன்று, கைதாகி தடுத்து வைக்கப்பட்டு இருப்பவர்கள் இந்த அரசாங்கத்தினால் பழிவாங்கப்பட்ட வரலாற்றைக் காட்டிக்கொள்வது. இரண்டாவது இராணுவத்தின் மீது தமக்கு இருக்கும் அக்கறையை காட்டுவதன் மூலம் சிங்கள பௌத்த வாக்குகளை உறுதிப்படுத்திக் கொள்வது. ஒருவகையில் சொல்லப்போனால் இது போர் வெற்றி வாதத்தின் அடுத்த கட்டம் என்றுதான் சொல்ல வேண்டும். போர் வெற்றியை முன்னிலைப்படுத்தி அதிகாரத்தை தக்க வைத்துக் கொண்டவர் மகிந்த ராஜபக்ச. இப்போது இராணுவத்தினரை பாதுகாப்பது என்ற கோஷத்தை முன்னிலைப்படுத்தி அதிகாரத்திற்கு வருவதற்கு துடிக்கிறார் கோத்தாபய ராஜபக்ச.

நீதிமன்ற விசாரணையில் உள்ள ஒருவரை விடுதலை செய்ய வேண்டுமானால் அதைப்பற்றி நீதிமன்றம்தான் தீர்மானிக்க வேண்டும். சனாதிபதி அதனைத் தீர்மானிக்க முடியாது. ஏனெனில் இது நீதித் துறையுடன் சம்பந்தப்பட்ட ஒரு விவகாரம். கோத்தபாய அணுகுமுறை நீதிமன்றத்தை மீறிச் செயற்படப்போகும் அவருடைய அதிகார போதையை வெளிப்படுத்துகின்றது. மகிந்த ராஜபக்சவின் காலத்தில் நீதித்துறைக்கு எதிராக அல்லது நீதித் துறையை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளத்தக்க வகையில் அவர் செயற்பட்டார் என்பதை கண்டோம். அதன் தொடர்ச்சியாகத்தான் அவரது சகோதரரின் அணுகுமுறை அமைந்திருக்கிறது.

பெருந்தொகையான தமிழ் இளைஞர்கள் போர் முடிவடைந்த பின்னரும் பத்து வருடங்களுக்கு மேலாக தடுப்புக்காவலில் இருக்கின்றார்கள். அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதற்கு அரசியல் ரீதியான காரணங்களே உள்ளன. குற்றவியல் செயற்பாடுகளுக்காக அவர்கள் கைதாகவில்லை. இவர்கள் பலர் மீது விசாரணைகள் நடத்தப்படவில்லை. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. அவர்களை விடுதலை செய்வது என்பது மிகவும் இலகுவானது. அதற்கு ஒரு அரசியல் தீர்மானமே போதும்.

ஆனால் அதனை செய்வதற்கோ அல்லது அது குறித்த தீர்மானத்தை உருவாக்குவதற்கோ இலங்கை தற்போதைய ஆட்சியாளர்களோ வேட்பாளர்களோ தயாரில்லை. சிங்கள மக்களை திருப்திப்படுத்தும் வகையில் படையினர் விடுவிக்கப்படுவார்கள் என்பது மட்டுமே அவர்களால் சொல்லக் கூடியதாக இருக்கின்றது. தமிழ் மக்களும் இந்த நாட்டுப் பிரசைகள் என்பதை ஏற்றுக்கொள்வதற்கு சிங்கள அதிகாரவர்க்கம் ஒருபோதும் தயாரில்லை என்பதையே இவர்களின் பேச்சு வெளிப்படுத்துகிறது.

**- ஆசிரியர்**

தொடர்ச்சி 2ம் பக்கத் தொடர்ச்சி..
**இனப்படுகொலையை மறைக்கவா...**

பாதிக்கப்பட்ட மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்றவாறுதான் தமது செயற்பாடுகளை மேற்கொள்வது வழமை. ஆனால் இலங்கை விடயத்தில் அங்கு இடம்பெற்ற இனப்படுகொலை, போர்குற்றங்கள், மானிடத்திற்கு எதிரான குற்றங்கள், தற்போதும் தமிழர் பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் கட்டமைப்பு ரீதியான இன அழிப்பு செயற்பாடுகள் என அனைத்தையும் இலங்கை அரசு மூடிமறைத்துக் கொண்டிருக்கின்றது.

இப்போது இதற்குத் துணைபோகும் வகையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் செயற்படுகின்றது" எனவும் புத்திஜீவிகள் சார்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

"காணாமல் போனோர் செயலகம் அமைக்கப்பட்டிருப்பதைக் காட்டியே இந்த நிதி உதவி பெறப்படுகின்றது. ஆனால், அந்த அலுவலகத்தை பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்கவில்லை. அந்த செயலகம் செயற்படவும் இல்லை. காணாமலாக்கப்பட்டவர்களுக்குப் பொறுப்பானவர்கள் கண்டறியப்படவும் இல்லை.

பொறுப்புக் கூறப்படவும் இல்லை. வெறுமனே பிரச்சார உத்தியாகவும், சர்வதேச சமூகத்தின் முன்பாக தாம் முக்கியமான செயற்பாடுகளை முன்னெடுத்திருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காகவும் மட்டும்தான் இந்த செயலகத்தை அரசாங்கம் பயன் படுத்திக் கொள்கின்றது.

தமிழ்ப் பகுதிகளில் இடம்பெறும் இராணுவமயமாக்கல், பௌத்தமயமாக்கல், சிங்களமயமாக்கல் தீவிரமாக முன்னெடுக் கப்படும் நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் நிதி உதவிகள் இதனை ஏற்றுக்கொள்வதாகவும், அதற்காக வழங்கப்படும் அங்கீகாரமாகவுமே இருக்கின்றது. ஐரோப்பிய பாராளுமன்றம் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த முடிவை ஏற்கவில்லை.

இதுபோன்ற உதவிகளை வழங்கும் போது பாதிக்கப்பட்ட மக்களுடைய கருத்துக்களை அறிவதும் அவசியம். துருக்கி போனற நாடுகளில் இவ்வாறான உதவிகளை வழங்கும்போது பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்கள் பெறப்படுகின்றது. ஆனால் இலங்கை விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் அவ்வாறு செயற்படாமலிருப்பது ஐரோப்பிய ஒன்றியமும் இன ஒடுக்குமுறைக்கு துணை போகின்றதா? என்ற கேள்வி எழுப்பி யுள்ளனர். புலம்பெயர்ந்த நாடுகளில் செயற்படும் மனித உரிமை அமைப்புக்கள், ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதுடன், அவற்றுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்துவதும் அவசியம். அதன் மூலமாகவே அவை எடுக்கக்கூடிய முடிவுகளில் செல்வாக்கைச் செலுத்த முடியும்.

வெறுமனே பேரணிகளையும், போராட்டங்களையும் நடத்துவதுடன் மட்டும் நின்றுவிடாது, இராஜதந்திர ரீதியான செயற்பாடுகளின் மூலமாகவே இவ்வாறான நிலைமைகளை கையாள முடியும்" எனவும் புத்திஜீவிகள் ஆதங்கத்துடன் தமது கருத்துகளை எமது மின்னிதழுக்கு பதிவு செய்துள்ளனர்.

# விடுதலைப் புலிகளுடன் தொடர்பு: மலேசியாவில் இதுவரை 12 பேர் கைது

மலேசியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்ததாக மேலும் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து கைது செய்யப்பட்டோர்



எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்ததாக மலேசியாவின் மாகாண சட்டமன்ற உறுப்பினர்களான சாமிநாதன், குணசேகரன் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்பு படுத்து பினாங்கு துணை முதல்வர் ராமசாமி உள்ளிட்ட மேலும் சிலர் கைது செய்யப் படலாம் எனவும் கூறப்பட்டது.



இக்கைது நடவடிக்கைக்கு தாம் அஞ்சப் போவது இல்லை என ராமசாமி கூறியிருந்தார். இதேநேரத்தில் சட்டப் படியாகவே நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என மலேசிய அரசு தெரிவித்தும் வருகிறது. இந்நிலையில் பினாங்கு, சிலாங்கூரில் மொத்தம் 3 பேர் கைது செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. இதனைத் தொடர்ந்து ஆசிரியர் ஒருவரும் மாநில அரசின் தகவல் தொடர்பு நிறுவன தலைமை செயல் அதிகாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அண்மைய தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதையடுத்து விடுதலைப் புலிகள் விவகாரத்தில் மலேசியாவில் கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது. இதனிடையே ம.இ.காவின் தலைவர் டான்ஸ்ரீ விக்னேஸ்வரன், இலங்கையில் பல லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் மீது அனுதாபம் காட்டுவது எந்த வகையில் தவறாகும்? என கேள்வி எழுப்பியுள்ளார்.



அமைச்சர் குலசேகரன் கைது இல்லை இதனிடையே அமைச்சர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர் ஒருவருடன் அமைச்சர் குலசேகரன் இருக்கும் படம் சமூக வலைதளங்களில் நேற்று பரவியது.

இதையடுத்து குலசேகரன் கைது செய்யப்படலாம் என தகவல்கள் பரவின. ஆனால் கோலாலம்பூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அதிகாரி ஒருவர் அயூப் கான் மைதீன் பிச்சை, இந்த ஒரே ஒரு காரணத்துக்காக அமைச்சரை கைது செய்ய முடியாது என கூறினார்.

தொடர்ச்சி 2ம் பக்கத் தொடர்ச்சி..
**யாழ்.சர்வதேச விமான நிலைய...**

வசதிகள் செய்யப்படவுள்ளன. தமிழர் தாயகத்தில் விமான நிலையம் இயங்குவதும், தொப்புள்கொடி உறவுகளின் தயாகமான தமிழகத்துடன் இணைக்கப்பட்டிருப்பதும் வரவேற்கப்பட வேண்டியதொரு விடயமாக இருந்தாலும் யாழ்.சர்வதேச விமான நிலையம், பௌத்த சிங்கள பெருந்தேசிய சக்திகள் தாயகத்தினை ஆக்கிரமிப்பதற்கு வழிசமைத்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

காரணம், யாழ்.சர்வதேச விமான நிலையத்தின் எதிர்கால விஸ்தரிப்புக்காகவும், பாதுகாப்பிற்காகவும் ஆயிரம் ஏக்கர் தமிழர்களின் பூர்விக காணிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க, தற்போது விமான நிலையலத்தில் 600 வரையிலான வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இவற்றில் முதற்கட்டமாக 320 வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த வேலைவாய்ப்புக்களில் தமிழ் ஊழியர்களுக்கே அதுவும் வடக்கு ஊழியர்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. எனினும் முதற்படியாக விமான நிலைய ஊழியர்களை இணைத்துக்கொள்வதற்காக 94பேருக்கான விண்ணப்பங்கள் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களே உள்ளீர்க்கப்பட்டுள்ளமை கண்டறியப் பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப் படுகின்ற உள்ளூர் மற்றும் சர்வதேச அபிவிருத்தி திட்டங்களில் பெரும்பான்மையினத்தினைச் சேர்ந்த தென்னிலங்கை நபர்களை உள்ளீர்ப்பதானது படிப்படியாக குடியேற்றங்களையும், பௌத்த மதத்தின் பேரால் ஆக்கிரமிப்புகளை செய்வதையும் அனுபவரீதியாக கொண்டிருக் கின்றோம்.

இவ்வாறான பின்னணியில், முதற் கட்டமாக விமான நிலைய ஊழியர்கள் தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றமையும் பாரிய சந்தேகங்களை ஏற்படுத்தியிருகின்றது. இந்த தெரிவுகளை யார்? எங்கிருந்து? மேற் கொண்டார்கள் என்பதே தெரியாதுள்ளது.

ஏற்கனவே விமான நிலைய பாதுகாப்புக்காக தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பெறப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு தென்னிலங்கையை சேர்ந்தவர்களை பணியில் அமர்த்துவதென்பது மிக சுலபமாக, பலாலியைச் சூழவுள்ள தமிழர் தாயகத்தில் சிங்கள குடியிருப்புக்கள் தோற்றம்பெறுவதற்கே வழிசமைக்கும் ஆபத்துள்ளது. ஏற்கனவே இப்பகுதியில் விமான படையினரும், இராணுமும் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி குவிக்கப்பட்டுள்ள நிலையில் தென்னிலங்கை ஊழியர்களின் வருகையும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பை தமிழர் தாயகத்தில் மிகவும் ஆழமாக ஊன்றச் செய்துவிடும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.


ஆகவே தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திட்டங்கள் தமிழினத்தினை இனவழிப்புச் செய்துவிடக்கூடாது என்பதில் தமிழ்த் தேசிய சக்திகளும், சிவில் அமைப்புக்களும், பொதுமக்களும் விழிப்புடன் இருப்பது அவசியமாகின்றது என்றுள்ளது.

# சனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலக்கு மின்னிதழுக்கு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்து

சனாதிபதித் தேர்தல் நவம்பர் 16ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் தற்போது இரு தமிழ் வேட்பாளர் உட்பட 35 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். எனினும் பெருந்தேசியவாதக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியின் வேட்பாளர் அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கும், சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் வேட்பாளர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவுக்கும், மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் முத்தரப்பு போட்டி ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தீவில் பாரம்பரியத் தாயகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனம் 2009 இல் திட்டமிட்ட பாரிய இன அழிப்பை சந்தித்து நீதிக்கான போராட்டத்தினையும், தமது இருப்பிற்கான போராட்டத்தினையும் முன்னெடுத்துக் கொண்டிருக்கையில் மேற்படி மூன்று வேட்பாளர்களும் அவ்வினம் சார்ந்த இதயசுத்தமான வெளிப்பாடுகளைச் செய்வதற்கு தயங்கி வருகின்றார்கள் என்பதை அவர்களின் வரலாற்று பின்னணிகள், அண்மைக்கால கருத்துக்களிலிருந்து உணரமுடிகிறது. தமிழ்த் தேசிய இனத்தின் கோரிக்கைகளுக்கு குறைந்தபட்சம் செவிகொடுத்தாலே தமது பௌத்த சிங்கள பெருந்தேசிய வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டு விடும் என்ற மனநிலையில் செயற்பட்டு வருவதோடு மட்டுமன்றி, தமிழ் தேசிய இனத்தினை இரண்டாரம் தரப் பிரசைகளாகவே தொடர்ந்தும் வைத்திருப்பதன் ஊடாக பல்லினச் சமூகம் வாழும் இத்தீவினை முழுமையாக சிங்களத் தீவாக பிரகடனப்படுத்திவிடலாம் என்றும் கங்கணம் கட்டியுள்ளனர். இத்தகைய பின்னணியில், அடிப்படை, உடனடி பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எதிர்பார்த்திருக்கும் தமிழ்த் தேசிய இனம் எத்தகைய முடிவினை இந்த தேர்தலில் எடுக்க வேண்டும் என்பது மிக முக்கியமான விடயமாகின்றது. அது தொடர்பில் தமிழ்ச் சமூகத்தில் சிவில் பிரதிநிதிகளின் பதிவுகளின் கருத்துகள் வருமாறு...

## சிங்கள பெருந்தேசியத்தினுள் நின்று தமிழ்த் தேசியவாதிகள் சிந்திக்கின்றனர்

**சிரேஸ்ட அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம்**



தமிழ் மக்கள் பிரதானமாக நான்கு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். அன்றாடப் பிரச்சினைகள், ஆக்கிரமிப்பு பிரச்சினைகள், இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கான நீதி தொடர்பான பிரச்சினைகள், அடிப்படை பிரச்சினைகள் என்ற நான்கு வகைகளுக்குள் காணப் படுகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு வெளிப்படையான தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம் என்று கூறுவதற்கு கூட தற்போதைய சனாதிபதி வேட்பாளர்கள் தயாராக இல்லை.

மாறாக, சிங்கள பெருந்தேசிய வாதத்தினுள் நின்றுகொண்டு ஒருதரப்பு லிபரல் முகத்தினையும், மற்றொரு தரப்பு தீவிர முகத்தினையுமே வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இந்த தரப்புக்கள் தமிழ் மக்கள் மீது தொடர்ந்து கொண்டிருக்கும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கப் போவதில்லை. மாறாக ஆட்சி அதிகாரங்களை கையில் வைத்திருப்பவர்கள் மாற்றப்பட்டாலும், அரச இயந்திரம், அரச திணைக்களங்கள், மற்றும் படைத்தரப்புக்கள், மதத் தலைவர்கள் போன்ற கட்டமைப்புக்கள் தனித்தனியாவும், ஒன்றிணைந்தும் இலங்கையொரு சிங்கள பௌத்த நாடு என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஏனைய தேசிய இனங்களுக்கான அங்கீகாரத்தினை அழிக்கும் நிகழ்ச்சி நிரலை மாற்றப் போவதில்லை.

ஆகவே தமிழர்களின் தயாகத்தினை ஒருங்கிணைத்து ஒரு தேசமாக அங்கீகரிக்கப் படுவதற்கும், தம்மைத்தாமே ஆட்சி செய்கின்ற சுயநிர்ணயக் கோரிக்கையின் நியாயப்பாட்டினை வெளிப்படுத்தவும், ஆட்சியதிகாரங்களை மீளப்பெறாமையை உறுதிப்படுத்துவதற்கும் சனாதிபதித் தேர்தலை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருந்தன. அதாவது, பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் ஊடாக இந்த விடயங்களை தென்னிலங்கை சிங்கள பேரினவாத சக்திகளுக்கும், சர்வதேசத்திற்கும் தமிழ்த் தேசிய இனமாக எடுத்துரைப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் அது கைகூடியிருக்கவில்லை. காரணம், தமிழ் தேசிய சக்திகள் தமிழ் தேசியத்தினை மையப்படுத்திய சிந்தனைகளை மேற்கொள்வதற்கு பதிலாக, சிங்கள தேசியத்தின்பால் நின்று சிந்தனைகளை செய்து தீர்மானங்கள் எடுக்க விளைந்ததன் பலனாலேயே ஆகும்.

ஆகக்குறைந்தது, பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருங்கிணைந்திருந்தாலே இலங்கையில் நிலவும் பூகோள போட்டித் தன்மையின் காரணமாக, மூன்றாம் தரப்பாக சர்வதேச நாடொன்றின் தலையீடு ஏற்பட்டிருக்கும். அது தமிழ்த்தேசிய இனத்தின் பேரம்பேசலுக்கு வலுச்சேர்த்திருக்கும் என்றார்.

## தமிழினத்திற்கு தலைமைத்துவ வெற்றிடம் வெகுவாக ஏற்பட்டுள்ளது

**கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல்**



தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவை, கோத்தாபயவை, அநுரகுமாரவை ஆதரிக்கின்ற மனநிலையில் மூன்றாக பிளவுபட்டுள்ளனர். தமது உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் இவ்வாறான மனநிலைக்குத் தள்ளப்படுவதற்கு யார் காரணம் என்பதை ஆழ்ந்து அவதானிக்க வேண்டும். தமிழ் தலைவர்களே இதற்கு காரணகர்த்தாக்களாகின்றனர். இதனை எவரும் மறுதலிக்க முடியாது.

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்கு முன்னர் தமிழ் மக்கள் இவ்வாறானதொரு மனநிலைக்குச் சென்றிருக்கவில்லை. காரணம்? அன்றைய காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏக தலைமை இருந்தது. அந்த தலைமை காட்டிய வழியில் தமிழ் மக்கள் பயணித்தார்கள். ஆனால் தற்போதைய சூழலில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தினைச் சந்தித்த மக்களின் நிலைமைகளைக்கூட மறந்து தமிழ்த் தலைமைகளிடையே போட்டித்தன்மை ஏற்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் மாறுபட்ட நிலைப்பாடுகளை வெளிப்படுத்துகின்றார்கள்.

இதனால் தமிழ் மக்கள் குழப்பத்திற்குள்ளாவதோடு மட்டுமன்றி, அவர்களுக்கான தலைமைத்துவத்து வெற்றிடத்தினையும் வெகுவாக உணர்கின்றார்கள். இந்த நிலைமையே தற்போது தமிழ் மக்களை பெருந்தேசியவாத சிங்கள தலைவர்களின் பின்னால் பிளவுபட்டு அணிதிரள்வதற்கு வழிசமைத்துள்ளது.

இந்த விடயத்தினை எனது ஆதங்கமாக மட்டும் கொள்ளாது இனம் சார்ந்து பொருட்டாகக் கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என்றார்.

## தமிழ் மக்களின் சுயவிருப்பிலேயே தீர்மானம் அமைய வேண்டும்

**தென்கயிலை ஆதினத்தின் உறுப்பினரும், சமூக ஆர்வலருமான வைத்தியர் பாலமுரளி**



தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த தேர்தலில் கூட்டான முடிவொன்றை எடுக்க வேண்டிய அவசியமில்லை. பொதுவேட்பாளர் ஒருவர் பற்றிய தேவையும் இல்லை. அதற்காக நான் தேர்தலை முழுமையாக புறக்கணித்து விட்டு தமிழ் மக்கள் தேசிய விடயத்திலிருந்து ஒதுங்கியிருக்க வேண்டும் என்றும் கூறவில்லை.

தேர்தலில் பிரதான நபர்களான கோத்தாபய, சஜித் ஆகிய இரு நபர்களை எடுத்துக் கொண்டால் இவர்களால் தமிழ் மக்களின் விடயங்களுக்கு தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. கோத்தாபய பற்றிய அனுபவம் ஏற்கனவே இருக்கின்ற நிலையில் சஜித் புதியவராக இருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகளை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்தவர்களாகவே இருக்கின்றார்கள். தற்போது வரலாற்றில் என்றும் இல்லாதவாறு வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் பௌத்தமயமாக்கலைத் தீவிரப்படுத்தி அதனூடாக சிங்களமயமாக்கும் முயற்சிகளை இலங்கை ஆட்சியாளர்கள் தீவிரப்படுத்தி வருவதை நாம் அனைவரும் அறிவோம். அண்மையில் முல்லைத் தீவு நீதிமன்றத் தீர்ப்பினை மீறி பௌத்தத் துறவியின் உடல் இந்துக் கோவில் அருகில் எரியூட்டப்பட்டதன் மூலம் நாம் எவ்வாறான சூழலில் வாழ்கிறோம் என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும்.

ஆகவே இந்த தேர்தலில் கூட்டு முடிவொன்றை தமிழ் தரப்பு எடுப்பதால் பயனில்லை. அதேநேரம், விரும்பியோ விரும்பாமலோ நாம் இலங்கை அரசமைப்புச் சட்டத்தினை ஏற்றுக்கொண்டு சனநாயகக் கடமைகளை நிறைவேற்றத் தலைப்பட்டிருக்கின்றோம். ஆகவே பிரதிநிதிகளின் தீர்மானத்தினைவிடவும், தமிழ் மக்களே தமது சுய விருப்பு வெறுப்புக்களின் பால் நின்று யாருக்கு வாக்களிப்பது என்று தீர்மானிக்க வேண்டும் என்றார்.

# சனாதிபதித் தேர்தல் தொடர்பில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்ன சொல்கிறார்கள்?

## தமிழ்த் தேசிய தரப்புக்கள் அனைத்தும் ஒன்றுபடுவது காலத்தின் கட்டாயம்

**யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தலைவர் திவாகரன்**

போர் நிறைவடைந்து பத்தாண்டுகளாகின்ற நிலையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளோ, உரிமைக்கோரிக்கைகளோ, ஆகக்குறைந்தது அடிப்படைப் பிரச்சினைகளோ இன்னும் தீர்வுகள் கிட்டாது தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.



தென்னிலங்கை ஆட்சியாளர்கள் பௌத்த சிங்கள மேலாண்மை வாதத்தில் இருந்துகொண்டு தமிழ் பிரஜைகளை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கி, தமிழர் தயாகத்தின் வரலாற்றுப் பாரம்பரியங்களை அழித்து பல்லின இலங்கை தீவினை தனியொரு இனத்திற்கும், மதத்திற்கும் சொந்தமான நாடு என்று உருவாக்குவதற்கான திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துக்கொண்டே இருக்கின்றார்கள் என்பதற்கு அண்மையில் நீதிமன்ற தீர்ப்பை மீறி பௌத்த துறவியின் உடல் அடக்கம் செய்யப்பட்டதைக் கூறலாம்.

இந்த விடயத்திற்கு தீர்வுகள் கிட்டும் என்ற நம்பிக்கையுடன் 2015இல் ஆட்சிமாற்றத்தினை தமிழ் மக்கள் பங்களிப்புச்செய்து ஏற்படுத்தியபோதும் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய ஆட்சியாளர்களும் அவற்றை நிறைவேற்றியதாக இல்லை. எமது உறவுகளின் பிரச்சினைகளுக்கு தீர்வளித்ததாகவும் இல்லை. இவ்வாறான நிலையில் தற்போது நாட்டின் தலைமைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய இனமாகவும், தேசமாகவும் இருக்கின்றார்களென வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் தமிழர் தரப்புக்கள் பிரிந்து நிற்பதால் எதனையும் சாதித்து விட முடியாது.

ஆகவே சனாதிபதிக்குரிய அதிகாரங்களுக்கு உட்பட்டு எமது பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கவல்ல விடயங்களை பொதுப்படையாக வரைந்து அனைத்து தமிழ்த் தரப்புக்களும் ஒன்றிணைந்து முன்மொழிந்து உறுதிப்பாட்டை பெறுவதே பொருத்தமான செயற்பாடாக இருக்கும். அதற்கான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ள நிலையில் அதனை தவறவிடாது பயன்படுத்துவதே இனவிடுதலைக்கான பயணத்தில் முக்கிய செயற்பாடாக இருக்கும் என்றார்.

## பிரிந்து நிற்பதால், அடுத்த ஐந்து ஆண்டுகளும் ஓரங்கட்டப்படுவோம்

**கிழக்குப் பல்கலையின் கலை, கலாசார பீடத்தின் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் புவனராஜ்**



சிறுபான்மை சமூகமாகிய நாம் அரசியல் ரிதியாக எவ்விதமான பலமும் அற்றவர்களாகவே உள்ளோம். குறிப்பாக இலங்கைத் தீவு சுதந்திரமடைந்ததாக கூறப்படும் வரலாற்றுக் காலம் முதல் தமிழ் சமூகம் தேசிய இனத்திற்கான அங்கீகாரம் வழங்கப்படாத, உரிமைகள் மறுக்கப்பட்ட இரண்டாம் தர பிரஜைகளாகவே நாம் பார்க்கப்படுவதோடு, அரசியல் தோற்றத்திலிருந்தே, சிங்கள பெருந்தேசியவாத சக்திகள் எம்மை பார்க்கின்ற நிலைமைகளும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற பேரவலம் முதல் எந்தவொரு விடயத்திற்கும் நாம் நீதியைப் பெறவில்லை. எமது அபிலாஷைகளையும், உரிமைகளையும் பெறுவதற்கு முயற்சிகள் எடுத்தும் பேரினவாத சக்திகளின் சூழ்ச்சிகளால் நாம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றோம்.

தற்போதைய அரசியல் சூழலிலும் பேரம் பேசும் சக்தியை இழந்து, வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கொண்டு செயற்படும் அரசியல் தரப்புப்புகளாகத் தமிழ்த் தேசிய சக்திகள் சிதறிக் கிடக்கின்றது. இவ்வாறு சிதறிக் கிடப்பதால் எவ்விதமான பயனுமில்லை. அதேநேரம் தமிழ் மக்களின் உரிமைகளை நெஞ்சில் நிறுத்தி கொள்கைக்காக கருத்தொற்றுமையுடன் ஒன்றுணையும்போதே எமது உரிமைகளை வென்றெடுக்கமுடியும் என்பதையும் தமிழ் தலைமைகள் இந்த நேரத்தில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது பலம் என்ன? எமது பலவீனம் என்ன என்பதை நாம் ஆழ்ந்தாராய்ந்து தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டிய தருணம் தற்போது எழுந்துள்ளது. நாட்டில் சனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் முதற் கட்டமாக தமிழ் மக்கள் தனிப்பெரும் சக்தியை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து தமிழ்த் தரப்புக் களும் ஒன்றிணைய வேண்டும்.

எமது மக்களின் நீதிக்காவும், உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் இந்த சந்தர்ப்பத்தினை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் முகமாக அனைத்து தரப்புக்களும் இணைந்து பொதுவான நிபந்தனைகளை வகுத்து ஆட்சியாளர்களிடத்தில் உரிய உறுதிப்பாடுகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தச்சந்தர்ப்பத்தினை தவற விடும் பட்சத்தில் அடுத்த ஐந்து வருடங்கள் மீண்டும் நாம் ஓரங்கப்பட்டு நீதியும், உரிமைகளும் மறுதலிக்கப்பட்ட இனத்தவர்களாகவே இந்த நாட்டில் வாழவேண்டிய நிலைமைக்குள் தள்ளப்படுவோம் என்றார்.

## காணாமலாக்கப்பட்டோர் விடயத்திற்கு எந்த வேட்பாளர் உறுதியளிக்க தயார்?

**வடக்குக் கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர் யோகராசா கலாரஞ்சினி**



2017ஆம் ஆண்டிலிருந்து எமது பெறுமதிமிக்க உறவுகளைத் தொலைத்து விட்டு அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்காக தற்போது வரையில் வீதியில் இறங்கிப் போராடிக்கொண்டே இருக்கின்றோம்.

ஆனால் இன்று வரையில் ஆட்சிக்கு வருகின்ற எந்தவொரு தலைவர்களும் எமது கோரிக்கை தொடர்பில் உரிய பதிலளித்ததாக இல்லை. அரச தலைவர்களும், அரசாங்கங்களும் மாறிக் கொண்டேயிருக்கின்றன. ஆனால் எமது பிரச்சினையை இன்றுவரை எந்த ஒரு தலைவரும் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை ஒன்றுகூட முன்னெடுக்கவில்லை.

உறவுகளை மீட்பதற்காக பல்வேறு நெருக்கடிகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நாங்கள் முன்னெடுக்கும் போராட்டங்களை, நீதிக் கோரிக்கைகளை பலவீனப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளே தற்போது முன்னெடுக்கப் படுகின்றன.

இதுவரையில் தமது உறவுகளை மீட்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்ட தாய், தந்தையர்கள் 40ற்கும் அதிகமானவர்கள் இறந்துள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் வருவார்களா? என்ற ஏக்கத்துடனேயே நாம் ஒவ்வொரு நாளையும் கழித்து வருகின்றோம். அப்பா, அண்ணா, அக்கா எப்போது வருவார்கள் என்று எமது வீட்டில் உள்ள சிறுவர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் ஒவ்வொரு தாய்மாரும் தவித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் தற்போது சனாதிபதித் தேர்தலொன்றுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எமது இனத்தினை திட்டமிட்டு இனஅழிப்புச் செய்த ஒருவர் ஆட்சிப்பீடமேற துடிக்கின்றார். மற்றையவர் இன அழிப்புச் செய்தவர்களை சர்வதேச அரங்கில் காப்பாற்றிய கட்சியில் துணைத் தலைவராக இருப்பவர். அவர் ஆட்சிப்பீடமேறுவதற்கு முன்னரே எந்த நிபந்தனைகளையும் ஏற்கப்போவதில்லை என்று கூறிவிட்டார்.

இந்த நிலையில் தமிழ் தரப்புக்கள் எத்தகைய பேரம் பேசல்களை செய்து முடிவுகளை அறிவிக்கப்போகின்றன என்பதே எமது எதிர்பார்ப்பாகவுள்ளது. ஆகவே காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு உரிய நீதி வழங்கப்படும் என உறுதிமொழி அளிப்பதற்கு தேர்தல் களத்தில் இருக்கின்ற சனாதிபதி வேட்பாளர்கள் யார் என்பதே எமது கேள்வியாகவுள்ளது என்றார்.

# முதுகெலும்பில்லாத தலைமைத்துவத்திற்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதற்குத் தயாரில்லை

## மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் நேர்காணல்

**நீதிக்கு, உரிமைக்கு, மனிதாபிமான தன்மைக்கு முன்னுரிமை வழங்க முடியாத முதுகெலும்பில்லாத தலைமைத்துவம் அல்லது நீதியை வழங்குகின்ற தலைமைத்துவம் இல்லாத ஒரு தலைவருக்கு மக்கள் வாக்களிக்கத் தயாரில்லை என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் தெரிவித்தார். அவருடைய நேர்காணலின் இறுதிப் பகுதி வருமாறு.**

**கேள்வி:- தமிழ் மக்கள் சார்பில் ஐ.நா உட்பட சர்வதேச தரப்பின் செயற்பாடுகளை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில்:— ஐ.நாவினது செயற்பாடு என்பது தற்பொழுது தாமதமாகவே இருப்பதை உணரக் கூடியதாகவுள்ளது. ஏனென்றால் இலங்கை ஒரு இறைமையுள்ள சனநாயக நாடாக இருக்கின்றது என்பதனால் இதற்கு பல வருடங்களாக தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக காலம் தாழ்த்தி வருகின்றது. இதனால் எல்லாக் காலங்களுக்கும்



சார்பாக இருக்கமுடியாது. ஏனென்றால் ஐ.நா இன்றுவரை இலங்கைக்கு அதிக அழுத்தம் கொடுக்கவில்லை என்றாலும் நிலமைகளை அவதானிக்கவில்லை என்று கூற முடியாது.

ஒரு சனநாயக நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் தான் நாடுகளை ஏமாற்ற முடியும். ஆகவே ஒரு சனநாயக நாட்டில் உரிமை மறுக்கப்பட்டு தொடர்ச்சியாக ஒரு இனம் ஒதுக்கப்படுமாயின் நிச்சயமாக ஐ.நா தலையிட்டு தீர்வுகளை முன்னெடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்கான அழுத்தங்களை தமிழர் தரப்பு தொடர்ந்து முன்னெடுப்பது அவசியமாகிறது. இலங்கை அரசு மக்களுக்கு பல உண்மைகளை மறைக்கின்றது. ஆனால் சரத்து 30.1 இன்படி இலங்கை சர்வதேசத்துடன் இணைந்து தீர்வுக்கு சம்மதித்துள்ளது. தற்போது நடைபெறுகின்ற செயற் பாடுகளை பார்க்கின்றபோது நீதித்துறைக்கு எதிரான செயற்பாடுகளாக இருக்கின்றன.

அச்சுறுத்தல்கள், பாராளுமன்றத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள், சமயத்தளங்களின் பேரினவாதத்தின் அடாவடித்தனங்கள், அத்துமீறிய குடியேற்றம், நில அபகரிப்பு இப்படியான பல செயற்பாடுகள் சனநாயக நாட்டில் நடைபெறுகிற வரை எந்த ஒரு மனித உரிமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடுகள் இதற்கு இடம் கொடுப்பதில்லை. எனவே நிச்சயம் ஐ.நாவோ, அன்றேல் வேறு ஒரு நாடோ தலையிட்டு தீர்த்து வைப்பதற்குரிய சந்தப்பம் உள்ளது.

**கேள்வி:- வடக்குக் கிழக்கில் நடைபெறுகின்ற பௌத்த சிங்கள ஆக்கிரமிப்புக்களைத் தடுப்பதற்கு எத்தகைய பொறிமுறையொன்று அவசியம் எனக் கூறுவீர்கள்?**

பதில்:— வடக்குக் கிழக்கில் நடைபெறுகின்ற ஆக்கிரமிப்பு குடியேற்றமானது சாதாரண சிங்கள மக்களால் முன்னெடுக்கப் படுவதில்லை. ஆனால் இதை செய்பவர்கள் சிங்கள மக்களின் பெயர்களைக் கூறி ஒரு குறிப்பிட்ட அரசியல் பின்னணி கொண்ட மக்களே தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரங்களை முற்றாக அளிக்க தூண்டுகின்றனர். இச்செயற்பாடுகள் மீண்டும் ஒரு இன அழிப்பை ஊக்கு விக்கின்ற ஒரு செயற்பாடாகவே இருப்பதை பார்க்கக் கூடியதாகவுள்ளது.

இலங்கையின் எல்லா மதத்தினருக்கும் சம உரிமை, சம அந்தஸ்த்து கொடுத்து வாழ வேண்டுமென்று அல்லது மதிக்கப்பட வேண்டும் என்று உலக நாட்டிற்கு கூறிக் கொண்டுவரும் இலங்கை அரசு இதைப் பார்த்தும் பாராமுகமாக இருப்பது இந்த சனநாயக நாட்டிற்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகமாகவே இதை வேதனை யோடு பார்க்கவேண்டியுள்ளது. இலங்கை அரசின் அடாவடித்தன, அத்துமீறிய, கொடூரமான, கீழ்த்தரமான செயற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குரிய வரைபுகளை முன்வைக்க வேண்டும். இலங்கை அரசானது அடாவடித்தனம் செய்கின்றவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி அவர்களின் செயற்பாட்டிற்குரிய தண்டனைகளை வழங்கவேண்டும். தமிழ்ப் பகுதிகளில் சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்த வேண்டும், சாதாரண சிங்கள மக்களுக் கிருக்கின்ற நல்ல உள்ளத்தை பயன்படுத்த வேண்டும்.

**கேள்வி:- தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை தொடர்பில் எவ்வாறான அணுகுமுறையொன்று தற்காலச் சூழலில் தேவையாக இருக்கின்றது?**

பதில்:— தற்போதைய சூழ்நிலையில் இலங்கை அரசானது நிச்சயமாக தமிழ் மக்களுக்கு எந்தவொரு தீர்வையும் வழங்குவதற்கு முன்வரப்போவதில்லை. இது வரலாற்று ரீதியான உண்மை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சாதாரண ஒரு சிறு பிரச்சனை என்று அரசு கருதுகிறது. அரசிடம் கையில் ஒப்படைக்கப்பட்டவர்களையே ஒப்படைக்கவில்லை என்று ஏமாற்றுகின்றது அரசு. ஒரு போதும் சாதாரணமாக சற்று அறிவு உள்ள மனிதன் சரியான தீர்மானங்களை அமுல்படுத்துகின்றான் ஆனால் அதற்கும் கீழ்த்தரமான மனிதத்தன்மையற்ற, நீதியற்ற, சமத்துவமற்ற, அனியாயம் நிறைந்தவர்கள் இருக்கும் வரையிலும் தேசிய பிரச்சனைக்கு தீர்வு இல்லை. ஆகவே சர்வதேச தலையீடு ஒன்றே தீர்வுக்கு வழிவகுக்கும் என்பதற்கு மாற்று கருத்து இருக்க முடியாது.

சட்டத்துறையை சுதந்திரமாக செயற்பட அனுப்பதிப்பதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும், தற்போது



நிரபராதிகள் பாதிக்கப்படுகின்றார்கள். அனால் குற்றவாளி சட்டத்திற்கு உட்படுவதில்லை. சட்டமானது சுயநலமாக பாவிக்கப்படுகின்றதே தவிர குற்றம் செய்பவர்களுக்கு தண்டனை கொடுப் பதில்லை.

**கேள்வி:- சர்வதேசத்தினை அல்லது மூன்றாவது தரப்பின் மத்தியஸ்த்தினை இன்னும் எதிர்பார்க்க முடியுமா?**

பதில்:— எதிர்பார்த்தாகத்தான் வேண்டும். ஏனெனில் தான் பெற்ற பிள்ளைக்கு தகப்பன் சரியான நீதி வழங்கவில்லை என்றால் நிச்சயமாக நீதியை அமுல் படுத்துகின்ற ஒருவரை நாடத்தான் வேண்டும் அல்லது அணுகத்தான் வேண்டும். பானையில் இல்லாவிட்டால் அகப்பையை அசைப்பதால் எந்தப் பயனும் இல்லை. இது சாதாரண விடயம். எனவே நிச்சயமாக சர்வதேச தலையீடும் தேவை. ஆகவே இதை நாங்கள் எதிர்பார்க்கலாம். 'இருள் இருந்தால் அடுத்து நிச்சயம் ஒளி வந்தேயாகும். யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இது வரலாற்று உண்மையும், தத்துவமுமாகும்.

**கேள்வி:- சனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் வகிபங்கு எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றீர்கள்?**

பதில்:— தமிழர்களின் வகிபங்கைத் தெளிவாகக் கூறமுடியாது. ஏனெனில்



மேலே கூறப்பட்டுள்ள நீதிக்கு, உரிமைக்கு, மனிதாபிமானத் தன்மைக்கு முன்னுரிமை வழங்கமுடியாத முதுகெலும்பில்லாத தலைமைத்துவம் அல்லது நீதியை வழங்குகின்ற தலைமைத்துவம் இல்லாத ஒரு தலைவருக்கு மக்கள் வாக்களிக்கத் தயாரில்லை.

# உளத்தை அழிப்பதுதான் பெரும் வாதை

**ஒக்டோபர் 10**
**சர்வதேச உளநல தினத்திற்கான சிறப்புக் கட்டுரை**

**தீபச்செல்வன்**

ஈழத் தமிழ் இனம், சந்தித்த இன அழிப்பு என்பது வெறுமனே உயிர்களும், உடல்களும் மாத்திரம் அழித்து நிகழ்த்தப்பட்ட ஒன்றல்ல. தமிழ் மனங்களை இலக்கு வைத்து இங்கொரு மாபெரும் இன அழிப்பு நடந்தது. அது இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. போரை முடித்து விட்டோம் என்று இலங்கையின் ஆட்சியாளர்கள் மார் தட்டிக் கொண்டிருக்கிறார்கள். போரின் வெற்றிக்கு சண்டை போடுகிறார்கள். இன்றைக்கும் ஈழத் தமிழர்கள் மீது வார்த்தைப் போரைத் தொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றது சிங்கள தேசம்.

அண்மையில் கிளிநொச்சியில் ஒரு அறிவித்தல் சுவரொட்டியைப் பார்த்தேன். சுமார் 55 வயது மதிக்கத்தக்க தாய் ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும், அவரை கண்டவர்கள் தொடர்பு கொள்ளுமாறும் அதில் எழுதப்பட்டிருந்தது. போரின் வலியை, பாதிப்புக்களை இன்னமும் சுமந்து கொண்டு திரிபவர்களின் கண்களுக்கு அந்த சுவரொட்டி தென்படுமா என்று நினைத்துக் கொண்டே அந்த அம்மாவைப் பார்த்தேன். நெற்றி நிறைய குங்குமம். நசிந்து வதைபடும் ஒரு புன்னகை முகத்தில். ஒரு குழந்தையைப் போல பரிதாபமான பார்வை கொண்ட முகம் அது. போர் தன் கோரத்தை எழுதிச் சென்றிருக்கிற முகமாகவே இருந்தது.

அந்த தாயின் மகன் காணாமல் ஆக்கப்பட்டவராம். பேரூந்தில், அருகில் இருந்தவர் சொல்லிக் கொண்டிருந்தார். பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்ட மண்ணில் தாய்மார்கள் காணாமல் ஆகிக் கொண்டிருக்கிறார்கள். மனம் பிசகியவர்களாக தொலைந்து கொண்டிருக்கிறார்கள். ஈழம், தாய்மார் தொலைகின்ற நிலம். ஈழம், மனிதர்கள் தொலைகின்ற நிலம். காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்காக போராடிக் கொண்டிருந்த பல தாய்மார்கள் திடீர் திடீரென்று தமது உயிரை விடுகின்ற நிகழ்வுகளும் ஈழத்தில் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. அண்மையில், முல்லைத்தீவில் ஒரு மாணவன், வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டான். போருக்குப் பிறகு தற்கொலைகள் அதிகரித்திருப்பது இயல்பான விடயமா? பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், சிறுவர்கள் என்று போர் வேட்டையாடிய விளிம்பு மனிதர்கள்தான் இவ்வாறு தம்மை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். போர் சிதைத்த குடும்பங்களும், போர் சிதைத்த மனங்களைக் கொண்டவர்களும்தான் இப்படி அழிக்கப்படுகிறார்கள்.

இவை கொலையா? தற்கொலையா? இவை கொலைதான். இவை இன அழிப்புக் கொலை. ஈழத் தமிழர்கள்மீது சிங்கள அரசு நடாத்திய யுத்தம் முள்ளிவாய்க்காலுடன் முடிந்துவிடவில்லை. முள்ளிவாய்க்காலில் மாத்திரம் நம் குருதியை சிந்தவில்லை. இன்றைக்கும் குருதியை சிந்திக் கொண்டுதான் இருக்கின்றோம். முள்ளிவாய்க்காலில் மாத்திரம் உடல்களைப் புதைக்கவில்லை. இன்றைக்கும் உடல்களை இந்த மண்ணில் புதைத்துக் கொண்டுதான் இருக்கின்றோம். குண்டுகள் வீசப்பட்டு, விமானங்களால் தாக்கப்படாவிட்டாலும் ஈழத் தமிழ் மக்களின் உடல்களும், உள்ளங்களும் வீழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

போரில் அழிக்கப்பட்டவர்களுக்கு நீதி இன்றுவரை வழங்கப்படவில்லை. இன அழிப்புப் போரின் நீதி மறுக்கப்பட்டவரையில், பாதிக்கப்பட்ட மனங்கள் ஆற்றுப்படுத்தலுக்கு உள்ளாகப் போவதில்லை. கொடிய போர்தான் இன்றுவரை சிங்களப் பேரினவாத்தின் அரசியல் இருப்பாக இருக்கிறது. ஈழத் தமிழர்களை நானே வென்றேன், போர் வெற்றி எனக்கே உரியது என்று மீண்டும் மீண்டும் வார்த்தைப் போர் நிகழ்த்தப்படுகின்றது. அவ்வாறு வார்த்தைப் போர் நடக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஈழத் தமிழர்களின் மனங்கள் கொல்லப்படுகின்றன.

**போரில் தந்தையை இழந்த மாணவி, பாடசாலை செல்வதற்கு சீருடை, புத்தகப் பை இல்லாத நிலையில் தற்கொலை செய்து கொண்டார். இந்த நிகழ்வு கிளிநொச்சியை மாத்திரமல்ல, தமிழர்களின் தாயகத்தையே உலுக்கியது.**

போரின் முடிவில் முன்னாள் போராளிகள் வதை முகாங்களில் அடைக்கப்பட்டனர். அங்கே போராளிகளின் நகங்கள் கிழிக்கப் படவில்லை. அவர்கள் மீது துப்பாக்கிளால்



தாக்கவில்லை. அப்படி எந்த வன்முறையும் நடக்காத தோற்றத்தை காண்பிக்க வேண்டிய தேவை சிங்கள அரசுக்கு இருந்தது. ஆனால் அந்த முகாமில் இருந்த இராணுவத்தின் முகங்களும், அவர்களின் உணவும், காற்றும் எம் போராளிகளை பாரிய வாதைகளுக்கு உட்படுத்தின. அதுவே அவர்களை உளவியல் ரீதியாக பெரும் சித்திரவதை செய்தது. அவர்களின் மனங்களை முற்று முழுதாக அழித்துவிட வேண்டும் என்பதே சிங்கள தேசத்தின் நோக்கம்.

2009இற்குப் பின்னர் நூற்றுக்கணக்கான முன்னாள் போராளிகள் மரணித்துள்ளனர். மர்மமாகவும், தெற்றாநோய்களாலும், தற்கொலைகளாலும் இவர்களின் மரணங்கள் நிகழ்ந்துள்ளன. முன்னாள் போராளிகள் வெளியில் விடப்படாலும் தொடர்ந்து கண்காணிப்படுகின்றனர். எச்சரிக்கப்படுகின்றனர். இவைகளே அப் போராளிகளை உளவியல் ரீதியாக பெரும் வாதைக்கு உள்ளாக்கி இறுதியில் அவர்களின் உயிர்களைப் பறித்துள்ளன. முன்னாள் போராளிகளின் திடீர் மரணத்தைத் தடுக்க எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கபடவில்லை.

கடந்த ஆண்டு கிளிநொச்சியில் பாடசாலை மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்ட நிகழ்வு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. போரில் தந்தையை இழந்த மாணவி, பாடசாலை செல்வதற்கு சீருடை, புத்தகப் பை இல்லாத நிலையில் தற்கொலை செய்து கொண்டார். இந்த நிகழ்வு கிளிநொச்சியை மாத்திரமல்ல, தமிழர்களின் தாயகத்தையே உலுக்கியது. போர் குழந்தைகளின் புற உலகத்தை மாத்திரமல்ல, அகவுலகத்தையும் எதிர்காலத்தையும்கூட சிதைத்துள்ளது. இத்தகைய மாணவர்கள், சிறுவர்கள் இனங்காணப்பட்டு உளவியல் ரீதியாக பலமூட்டப்பவில்லை. அத்துடன் அவர்களின் எளிய தேவைகள்கூட நிறைவு செய்யப்படவில்லை. போர் முடிவடைந்து பத்தாண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் ஈழத் தமிழ் சமூகம் உளவியல் ரீதியாக முள்ளிவாய்க்கால் போரிலிருந்து விடுபடவில்லை என்பதை இதுபோன்ற பல நிகழ்வுகளும் எடுத்துக் காட்டுகின்றன. சிங்கள அரசின் திட்டமே அதுதான். நிலத்தை பறிப்பது, கொல்லப்பட்ட உறவுகளுக்கு நீதியை மறுப்பது, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் கள்ள மௌனத்தில் இருப்பது போன்ற பிரச்சினைகளை கொதி நிலையில் வைத்திருந்து ஈழத் தமிழ் சமூகத்தை அழித்தொழிப்பதே சிங்கள அரசின் தீர்வாகும்.

அண்மையில் முல்லைத்தீவு செம்மலை நீராவியடியில் சிங்கள பௌத்த பிக்குவை தமிழர்களின் ஆலய வளாகத்தில் வைத்து தீமூட்டிய சம்பவம் சிங்களத்தின் பௌத்த பேரினவாத உளவியல் வெறிக்கு சிறந்த உதாரணம். அத்தகைய செயல்களின் மூலம் உளவியல் ரீதியாக ஈழத் தமிழ் மக்களை சீண்டி, அடக்கி ஒடுக்க சிங்களம் முயல்கின்றது. ஆனால் அந்த நெருக்கடிகளை, எழுச்சி மிகு எதிர்ப்பாக, ஒரு போராட்டமாக தமிழர் தேசம் அடுத்த நாளே செய்தது. அவ்வாறான எழுச்சிகளும், எதிர்ப்புக்களுமே ஈழத் தேசத்திற்கு இன்று தேவைப்படுகின்றன.

சிங்களப் பேரினவாதம் ஏற்படுத்தும் உள நெருக்கடிகளை ஒரு போராட்டமாக மாற்ற வேண்டிய தேவை ஈழத் தமிழ் மக்களுக்கு உள்ளதையே இந்த ஆண்டின் சர்வதேச உளநல தினம் எடுத்துரைக் கின்றது. எல்லா மரணங்களையும் வென்று வாழ்வை வரைய வேண்டும். தலை நிமிர்ந்த, வல்லமை உள்ள இனமாக மாற வேண்டும். அதுவே சிங்களத்திற்கு ஈழத் தமிழ் மக்கள் வழங்கும் சிறந்த பதிலாகவும், போராட்டதாகவும் அமையும். ஈழத் தமிழ் மக்கள் முப்பது ஆண்டுகளாக விடுதலை தேசத்திற்காக ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். அறுபது ஆண்டுகளாக சிங்கள அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக போராடுகின்றார்கள்.

எனவே சிங்கள அரசின் உயவியல் ரீதியான இன அழிப்பு போரையும், அதன் தாக்கத்தையும் புரிந்து கொள்ளுவதுடன் அதிலிருந்து தப்புகின்ற வழிமுறைகளையும் வகுத்து கொள்ள வேண்டியது அவசியமானது. சிங்களப் பேரினவாத்திற்கு எதிராக தலைசிறந்த விடுதலைப் போராட்டத்தை நடாத்திய ஈழத் தமிழ் இனம் அதை செய்ய வேண்டும். அதுவே அப் போராட்டத்தினை வெற்றி பெறச் செய்வதுடன் அதற்குகந்த மரியாதையாகவும் அமையும்.

# சிங்கள வாக்குகளை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் பரப்புரைகள்



பூமிகன்

சிறீலங்கா சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிரச்சாரங்கள் சூடுபிடித்துள்ளன. பொது ஜன பெரமுனவின் சனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தன்னுடைய பிரச்சாரத்தை புதன்கிழமை அனுராதபுரத்தில் ஆரம்பித்துவைத்துள்ளார். ஐ.தே.க கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச கொழும்பில் தனது பிரச்சாரங்களை வியாழக்கிழமை தொடங்கியிருக்கின்றார். இதன் மூலம் பிரச்சாரங்கள் அனல்பறக்கத் தொடங்கியிருக்கின்றது.

வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் அதிகமாக 35 வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். ஆனால், கோத்தபாயவுக்கும் சஜித்துக்கும் இடையில்தான் நேரடிப் போட்டி. தேர்தலில் வெற்றி பெற வேண்டுமானால் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் குறைந்த பட்சம் 50 வீதம் +1 வாக்குகளை ஒருவர் பெற வேண்டும். தேர்தல் களத்தில் அதிகமானவர்கள் போட்டியிடுவதால் வாக்குகள் பிளவுபடுவதற்கும் ஒருவர் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறமுடியாமல் போவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

பிரதான இரு கட்சிகளும் சிறீய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிட வேண்டும் என ஆர்வமாக இருப்பதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். 50 வீதம் +1 வாக்குகளை வேட்பாளர்கள் யாரும் பெற்றுக்கொள்ளத் தவறினால், மூன்றாவதாக வந்த வேட்பாளரின் இரண்டாவது தெரிவு எண்ணப்பட்டே முடிவு அறிவிக்கப்படும்.

பொது ஜன பெரமுனவைப் பொறுத்த வரையில் அது கூட்டணி அமைத்துள்ள கட்சிகளைப் பார்த்தால், அதிகளவுக்கு இனவாதத்தை முன்னெடுக்கும் கட்சிகள். விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பிலவின் பிருதிவி ஹெல உறுமய கட்சி, அத்துரலிய ரத்ன தேரர் தலைமையிலான ஜாதிக ஹெல உறுமய போன்றன அங்குள்ளன. அதனைவிட இடதுசாரி கட்சிகள் சிலவும் இந்த முன்னணியுடன் இணைந்துள்ளன. சிறுபான்மையின கட்சிகளைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட்ட கட்சிகளான ஈ.பி.டி.பி, பிள்ளையான் தலைமையிலான மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, கருணாவின் கட்சி, வரதராஜப் பெருமாள் தலைமையிலான அணி, விடுதலைப் புலிகள் ஜனநாயக முன்னணி, பிரபா கணேசன் தலைமையிலான கட்சி போன்றவைதான் அங்குள்ளன. முஸ்லீம் கட்சிகளைப் பொறுத்தவரையில் அதாவுல்லாவின் அணி ராஜபக்ச தரப்புடன் நிற்கின்றது. ஆறுமுகம் தொண்டமானின் இ.தொ.காவும் கோத்தாவுக்கே ஆதரவு. அரசியல் அரங்கில் மற்றொரு முக்கிய சக்தியாகவுள்ள சுதந்திரக் கட்சி கோத்தபாயவை ஆதரிப்பதற்கு முடிவெடுத்திருக்கின்றது. கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் படுதோல்வி அடைந்த சுதந்திரக் கட்சி, மீண்டும் மண்ணைக் கவ்வ விரும்பவில்லை. சுதந்திரக் கட்சியில் இருந்தவர்கள்தான் தனியாகப் பிரிந்து சென்று ராஜபக்சக்கள் தலைமையில் பொதுஜன பெரமுனையை அமைத்திருக்கின்றார்கள். இன்று பலம்வாய்ந்த ஒரு கட்சியாக அது உருமாறியிருக்கும் பின்னணியில், சுதந்திரக் கட்சி கரைந்து போகத் தொடங்கியுள்ளது. தேர்தல் கூட்டணிக்கு சுதந்திரக் கட்சி முன்வைத்த நிபந்தனைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட நிலையில், நிபந்தனைகள் இன்றி கோத்தபாயவை ஆதரிப்பதென்ற முடிவு கட்சியால் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்சிகளின் ஆதரவுடன் சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்குத் தேவையான 50 வீதத்தைத் தாண்டிவிட முடியும் என ராஜபக்ச தரப்பினர் நம்புகின்றார்கள். கடந்த 2015 சனாதிபதித் தேர்தல், கடந்த 2018 பெப்ரவரியில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிவுகள் என்பவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது தற்போதுள்ள ஆதரவுடன் தம்மால் வெற்றிபெற முடியும் என்பது அவர்களுடைய மதிப்பீடு.




ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரையில் பல கட்சிகள் அதனுடன் இணைந்து இருக்கின்றன. மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், போன்ற கட்சிகள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவும் தமக்குக் கிடைக்கும் என சஜித் தரப்பு எதிர்பார்த்துள்ளது.

சஜித் அணியைப் பொறுத்தவரையில் பிரதான சிறுபான்மையினக் கட்சிகள் அங்கு நிற்பதுதான் அவர்களுக்குள்ள முக்கிய பலம். சிறுபான்மையின மக்களும், குறிப்பாக தமிழ் மக்கள் சஜித்துக்கே வாக்களிப்பார்கள் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். சிறுபான்மையின மக்களின் வாக்குகள் தமக்கே கிடைக்கும் என்ற நம்பிக்கையில், சிங்கள வாக்குகளை இலக்கு வைத்துச் செயற்பட வேண்டியவராகவே சஜித் இப்போதுள்ளார். புதன்கிழமை தமது பிரச்சாரத்தை ஆரம்பித்து கோத்தபாய அனுராதபுரத்தில் நிகழ்த்திய உரை அவரை ஆதரிக்கும் சிறுபான்மையினக் கட்சிகளை அதிரவைத்துள்ளது. தான் ஆட்சியைக் கைப்பற்றிய மறுநாளே, சிறைகளில் உள்ள படையினர் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் அவர் அறிவித்திருக்கின்றார். சிங்கள, பௌத்த வாக்குகளை இலக்குவைத்தே இதனை அவர் கூறியுள்ளார். தடுப்பிலுள்ள படையினரில் பெரும்பாலானவர்கள் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள். பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை, கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல், கொலை போன்றவற்றில் சம்பந்தப்பட்டு ஆதாரங்களுடன் கைதானவர்கள். அவர்கள் மீது வழக்குகளும் உள்ளன.



அவர்களை விடுவிப்பதாயின் நீதிமன்றத்தின் மூலமாகவே விடுவிக்க வேண்டும். ஆனால், கோத்தபாயவின் அறிவிப்பு படையினரைப் பாதுகாக்கும் விவகாரத்தில் அவர் சட்டத்தை கைகளில் எடுப்பார் என்பதைக் காட்டுகின்றது. வழக்கு விசாரணைகள் இன்றி தடுப்பில் பல வருடங்களாக இருக்கும் தமிழ் இளைஞர்கள் விவகாரத்தை அவர் பேசவில்லை.

இதேபோல கொழும்பில் வியாழக்கிழமை இடம்பெற்ற தமது முதலாவது பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய சஜித், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சரத் பொன்சேகாவை பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்போவதாக அறிவித்தார். அரசியல் காரணங்கள் இந்த அறிவிப்புக்கு காரணமாக இருக்கலாம். ஆனால், அரசியலில் இராணுவம் செல்வாக்கு செலுத்தத் தொடங்கிவிட்டதை இது உறுதிப்படுத்துகின்றது.

சிங்கள வாக்குகளை இலக்கு வைத்ததாகவே இரு தரப்பினரது பிரசார உபாயங்களும் அமைந்திருக்கின்றன. சிறுபான்மையினரது பிரச்சினைகள் குறித்து தமது பரப்புரைகளில் பேசுவதை அவர்கள் தவிர்த்துக்கொள்கின்றார்கள். அது சிங்கள வாக்குகளை பாதிக்கும் என்ற அச்சம் அவர்களுக்குள்ளது. இந்த நிலையில் தமிழ்த் தரப்புக்கு அவர்கள் எந்த உறுதிமொழிகளையும் தருவார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல.

# முல்லைத்தீவில் கற்கால தடயங்கள் கண்டுபிடிப்பு

## தொல்லியல் பிரதேசமாக அறிவிக்க சிவில் சமூகத்தினர் வலியுறுத்தல்

முல்லைத்தீவு, கொக்காவிலுக்கும், மாங்குளத்திற்கும் இடைப்பட்ட பிரதான வீதியின் தொலைவில் காடுகள் சூழ்ந்துள்ள பனிக்கன்குளம் ஆற்றின் கரையோரங் களிலிருந்து கற்கால மக்கள் வேட்டையாடப் பயன்படுத்திய கற்கருவிகள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

பனிக்கன்குளத்தில் வாழ்ந்து வரும் கஜன், ஜெயகாந்தன் ஆகியோர் காட்டு பிரதேசத்தில் உள்ள ஆற்றின் கரையோரத்தில் காணப்பட்ட தானியங்கள் அரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதெனக் கருதக்கூடிய கருங்கல்லின் புகைப்படம் ஒன்றை எமக்கு அனுப்பியிருந்தனர். இக்கருங்கலின் வடிவமைப்பும், அதன் பயன்பாட்டு நோக்கமும் மிகவும் பழமை வாய்த்ததாகக் காணப்பட்டதால் அவ்விடத்திற்குத் தொல்லியல் விரிவுரையாளர் க.கிரிகரனுடன் இவ்வாரம் சென்றிருந்தோம். தற்போதைய இக்காட்டுப் பிரதேசத்தில் பிரதான வீதிக்கு ஒரு மையில் சுற்றுவட்டத்திலேயே சில குடியிருப்புகள் காணப்படுகின்றன.

ஏனைய பிரதேசம் வன்னேரிக்குளம் வரை மக்கள் வாழமுடியாத அடந்த காடாகவே காணப்படுகின்றது. ஆயினும் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே செறிவான மக்கள் குடியிருப்புகள் இருந்ததை உறுதிப்படுத்தும் நம்பகரமான தொல்லியற் சான்றுகள் ஆற்றின் இரு மருங்கிலும் செறிவாகக் காணப்படுகின்றன.

அவற்றுள் பல அளவுகளில், பல வடிவங்களில் செய்யப்பட்ட மட்பாண்ட ஓடுகள், செங்கற்கள், இரும்பு படிமங்கள், கருங்கற்களில் வடிவமைக்கப்பட்ட பாவனைப் பொருட்கள் முதலியன ஆற்றையண்டிய மேட்டுப்பகுதியில் இருந்து கண்டுபிடிக்க முடிந்தது. இவ்வாதாரங்கள் இலங்கையில் கந்தரோடை, கட்டுக்கரைக்குளம், அநுராதபுரம் தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், அழகன்குளம், அரிக்கமேடு ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதியிரும்புக்கால (பெருங்கற்கால) பண்பாட்டுக்குரிய சான்றாதாரங்களை நினைவுபடுத்துவதாக உள்ளன. இப்பிரதேசத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் நிரந்தரமான குடியிருப்புகள் தோன்றுவதற்கு முன்னர் நாடோடிகளாக உணவுக்காக மிருகங்களை வேட்டையாடி வாழ்ந்த கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் இங்கு கிடைத்திருப்பது முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது.

அவற்றை உறுதிப்படுத்தும் நம்பகரமான சான்றுகளாக குவாட்ஸ், சேட் கற்களிலிருந்து வடிவமைக்கப்பட்ட சிறுதொழிட்பத்துடன் கூடிய கற்கருவிகளும், கருவிகளை வடிவமைக்கும் போது ஏற்பட்ட கற்களின்



பாகங்களும் ஆற்றின் கரையோரங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதரங்கள் இப்பிரதேசத்தில் பெருங்கற்காலப் பண்பாடு தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இடைக்கற்கால அல்லது நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையில் பழங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்தனர் எனக் கூறப்பட்டாலும் இடைக்கற்கால அல்லது நுண்கற்காலப் பண்பாடிலிருந்தே மனித வரலாற்றையும், பண்பாட்டு வரலாற்றையும் தொடர்ச்சியாக அறிய முடிகின்றது. அவற்றுள் நாடோடி வாழ்க்கை முறையைப் பின்பற்றிய நுண்கற்காலப் பண்பாடு (இடைக் கற்காலப் பண்பாடு) 37,000 ஆண்டிலிருந்து 3000 ஆண்டுகள் நிலவியதாகவும், நிலையான குடியிருப்புக்களைக் கொண்ட நாகரிக வரலாற்றுக்கு வித்திட்ட பெருங்கற்காலப் பண்பாடு இற்றைக்கு 3000 ஆண்டிலிருந்து 1700 வரை நிலவியதாகவும் காலங்கள் கணிப்பிடப்பட்டுள்ளன.

இவ்விரு பண்பாடுகளும், அப்பண்பாடு களுக்குரிய மக்களும் தென் தமிழகத்தில் இருந்தே புலம்பெயர்ந்து வந்தவை என்பது தொல்லியலாளர்களின் கருத்தாகும். தற்போது அவ்விரு பண்பாடுகளுக்கும் உரிய சான்றாதாரங்கள் பனிக்கன் குளக் காட்டுப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை வட இலங்கையின் பூர்வீக வரலாற்றுக்கு புதிய செய்தியைச் சொல்வதாக உள்ளது.

இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இவ்விடத்தை தொல்லியல் மையமாகப் பிரகடனப்படுத்துமாறு இலங்கைத் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து எமது செய்தி குழு தொல்லியலாளர்கள், வரலாற்றுத்துறை பேராசிரியர்கள் சிவில் சமூக பிரதிநி— திகளிடம் கருத்துக் கேட்டபோது தமிழர்களின் பூர்விக அடையாளங்களை பாதுகாப்பதும் அதன் தன்மை குறித்து ஆய்வு செய்வதும் மிகவும் அவசியமானது ஆகும் எனவே எவ்விடத்தினை தொல்லியல் பிரதேசமாக அறிவிப்பதோடு உடனே ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கருத்து கூறினார்கள்.

## சிவாஜிலிங்கம் சனாதிபதித் தேர்தலில் இருந்து விலக வேண்டும்:ரெலோ அறிவிப்பு



சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு சிவாஜிலிங்கம் வேட்புமனு தாக்கல் செய்துள்ள நிலையில் இது தொடர்பாக ஆராய்வதற்காக ரெலோவின் தலைமைக்குழு வவுனியாவில் இன்று கூடியது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கட்சியின் செயலாளர் சிறிகாந்தா கருத்து தெரிவித்த போது சனாதிபதித் தேர்தலில் இருந்து விலகுமாறு சிவாஜிலிங்கத்தை கூறுவதுடன், அமைப்பு விதிகளுக்கு அமைய ஏனைய நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென ரெலோவின் தலைமைக் குழு தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கட்சியினுடைய நிலைப்பாட்டிற்கு மாறாக கட்சியின் அனுமதியின்றி சுயேட்சை வேட்பாளராக தேர்தலில் போட்டியிட நியமனப் பத்திரம் தாக்கல் செய்து தேர்தல் களத்தில் செயற்பட்டு கொண்டிருக்கின்றார் எனவும் குறிப்பிட்டார். எனவே அவர் எதிர்வரும் சனிக்கிழமை மாலைக்குள் தேர்தலிலிருந்து உடனடியாக விலக வேண்டும் என கட்சி வேண்டுகோள் விடுக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## முன்னாள் போராளியின் மனைவியும், சகோதரியும் கைது!

திருகோணமலை — சேருநுவர பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்ட, முன்னாள் புலிஉறுப்பினரின் வீட்டிலிருந்து வெடிபொருட்கள் மற்றும் கருவிகள் மீட்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி அம்பாள் குளத்தில் அமைந்துள்ள அவரது நேற்று வீடு சோதனைக் குட்படுத்தப் பட்டது. இதன்போது குறித்த வீட்டில் இருந்த, கைது செய்யப்பட்ட முன்னாள் போராளியின் மனைவி மற்றும் அவரது சகோதரி கைது செய்யப்பட்டனர்.



சோதனை நடவடிக்கையின்போது ரி56 ரக துப்பாக்கி 1, சிறிய ரக துப்பாக்கிகள் 3, கைக்குண்டுகள் 5, ரி 57 துப்பாக்கி ரவைகள் 150, சிறிய ரக துப்பாக்கி ரவை 45, மடிக்கணினி 1, தொலைபேசிகள் 4, எம் கே.எம் ஜி ரவைகள் 6, வெடிப்பு கருவிக்கான வயர்கள், வெடிப்பு கருவிகள் 4, ஜிபிஎஸ் 1, தானியக்கிகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சீனாவிற்கும் தமிழகத்திற்கும் இடையே 2000 ஆண்டுகளுக்கு முன்பே வர்த்தகம் : மோடி பெருமிதம்



சீனாவுக்கும் தமிழகத்திற்கும் இடையே 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வர்த்தகம் இருந்ததாக நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது மோடி கூறினார். சீன அதிபர் ஜி ஜின்பிங் — இந்திய பிரதமர் மோடி ஆகியோரின் முறைசாரா சந்திப்பு நிகழ்ச்சி, சென்னையை அடுத்த சுற்றுலா நகரமான மாமல்லபுரத்தில் வெள்ளி, சனி ஞாயிறு தினங்களில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு மகாபலிபுரம் அர்ஜுனன் தபசு பகுதிக்கு வந்த சீன அதிபரை பிரதமர் மோடி வரவேற்றார். பின்னர் இருவரும் உரையாடியபடி அங்குள்ள சுற்றுலாப் பகுதிகள் குறித்து மோடி விளக்கினார். இருவரின் தனிப்பட்ட சந்திப்புகளைத் தொடர்ந்து மோடி, ஜி ஜின்பிங் தலைமையில் இரு நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் அளவிலான பேச்சு நடைபெற்றது. அப்போது சீன அதிபரை வரவேற்று பேசிய மோடி, மதிப்பிற்குரிய விருந்தினரை வரவேற்கிறேன் என தமிழில் பேசினார்.

உலகின் மிகவும் தொன்மையான மொழியான தமிழில் நான் பேசுகிறேன் என்றார். இந்தியாவும் சீனாவும் பொருளாதார சக்திகளாக இருக்கின்றன என்றும், 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, சீனாவுக்கும் தமிழகத்திற்கும் இடையே ஆழமான கலாசாரம் மற்றும் வணிக உறவு இருந்தது என்றும் மோடி கூறினார்.

# இந்திய சீன உறவு ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள் என்ன?

தொழில் வளர்ச்சியிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் மிகவும் பின்தங்கியிருந்த இந்தியாவும், சீனாவும் பொருளாதார தாராளமயமாக்கலுக்குப் பிறகு வளர்ச்சியடைந்துள்ளன. உலகின் மொத்த மக்கள்தொகையான 770 கோடியில் இவ்விரு நாடுகளும் 37% மக்களைக் கொண்டிருக்கின்றன. 140 கோடி மக்கள்தொகையுடன் உலகிலேயே முதலிடத்தில் இருக்கும் சீனாவும், 130 கோடியுடன் இரண்டாவது இடத்தில் இருக்கும் இந்தியாவும் எடுக்கும் எந்த முடிவும் உலக நாடுகளால் அண்ணாந்து பார்க்கப்படுகின்றன. பொருளாதாரச் சீர்திருத்தத்தின் அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்லும் இரு நாடுகளும், இப்போதைக்கு உலக அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையாலும், அமெரிக்க அரசு எடுத்துள்ள பொருளாதாரத் தடை நடவடிக்கைகளாலும் வெவ்வேறு நிலைகளில் பாதிக்கப்பட்டுள்ளன.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளிலிருந்து தப்பிக்கப் பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றுவதைக் குறைத்தாக வேண்டிய கட்டாயத்தை இரண்டு நாடுகளும் எதிர்கொண்டுள்ளன. அதிலும் முக்கியமாக, டெல்லி உள்ளிட்ட பெரு நகரங்களில் காற்றுமாசு அதிகரிப்பால் இந்தியாவும், கான்டன் உள்ளிட்ட நகரங்களின் மாசுக்களால் சீனாவும் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. காற்றாலை மின்னுற்பத்தி, சூரிய ஒளி மின்னுற்பத்தி ஆகியவற்றை விரைவுபடுத்தவும் விரிவுபடுத்தவும் வேண்டிய தேவை இரண்டு நாடுகளுக்கும் இருக்கிறது. இப்படிப் பொதுவான பல அம்சங்கள் இருப்பதால் இரு நாடுகளுக்கு இடையே நட்புறவும், சமாதானமும் நிலவுவது அவசியம். அடுத்த கட்டமாக தொழில், சேவைத் துறைகளில் உடன்பாடுகளைச் செய்துகொண்டால் வளர்ச்சி, வேலைவாய்ப்பு, உற்பத்தியையும் மேம்படுத்திக்கொள்ளலாம்.

## பதற்றம் தணியும்

இரு நாடுகளுக்கும் இடையில் நேரடியான பிரச்சினைகள் இல்லாவிட்டாலும், வடகிழக்கு எல்லைப் பகுதியில் அருணாசல பிரதேசம் உட்பட பல இடங்களைச் சீனா சொந்தம் கொண்டாடுகிறது. கடந்த ஆண்டு டோக்லாம் என்ற இடத்தில் இரு நாடுகளின் இராணுவ வீரர்களும் சண்டையில் ஈடுபட்ட காட்சி உலக அளவில் விவாதமானது. 73 நாட்களுக்குப் பிறகுதான் அந்தப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு காணப்பட்டது. பாகிஸ்தானைச் சேர்ந்த தேடப்பட்ட பயங்கரவாதி ஹபீஸ் சய்யீது, காஷ்மீர் மாநிலத்தின் தனி அந்தஸ்த்து இரத்து ஆகியவை தொடர்பாக சீனா எதிர்க் கருத்துகளை வெளியிட்டிருந்தாலும் இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் அது பாதிப்பை ஏற்படுத்திவிடவில்லை.

'என்.எஸ்.ஜி' என்றழைக்கப்படும் அணுசக்தி தயாரிப்புக்கான சாதனங்களையும், இடுபொருட்களையும் பரிமாறிக்கொள்ளும் குழுவில் இந்தியா இடம்பெறுவதையும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையின் நிரந்தர உறுப்பினர் குழுவில் இந்தியாவை உறுப்பினராகச் சேர்ப்பதையும் சீனா கடுமையாக எதிர்த்துவருகிறது. ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தனது பட்டுப்பாதை பொருளாதாரப் பிராந்தியத் திட்டத்தைத் தொடங்கிய சீனா, இந்தியா அதில் சேராதது குறித்து இன்னமும் அதிருப்தியுடனேயே இருக்கிறது. இப்படி இரு நாடுகளுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகள் குறையாமலும், மாறாமலும் தொடர்கின்றன.

அதேவேளையில், ஒற்றுமைக்கான துறைகளை ஆராய்வதிலும் இரு நாடுகளும் அக்கறை செலுத்துகின்றன. சீனாவின் உய்குர் மாகாணத்தில் முஸ்லீம்கள் ஒடுக்கப்படுவது, திபெத்தில் அதிருப்தியாளர்கள் அடக்கப்படுவது, ஹொங்கொங்கில் தங்களுடைய உரிமைகளுக்காக மக்கள் போராடுவது



குறித்து இந்தியா வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்காமல், அவையெல்லாம் சீனாவின் 'உள்விவகாரம்' என்று அமைதி காக்கிறது.

## மாறிவரும் அணுகுமுறை

கடந்த ஒக்டோபர் 1 இல் 'சீன தேசிய தினம்' கொண்டாடப்பட்டது. அப்போது பூம்லா என்ற இந்திய எல்லைக்கு அருகில் இருந்த சீன இராணுவத் தளபதியும், வீரர்களும் முழுச் சீருடையில் இந்தியத் தளபதி பிரிகேடியர் ஜுபின் பட்நாகரையும், வீரர்களையும் கட்டியணைத்து வரவேற்றதுடன் இனிப்புகளையும், சிறப்புப் பலகாரங்களையும் அளித்து வாழ்த்துகளைப் பரிமாறிக்கொண்டனர். சீன இராணுவத்தினர் விரும்பி அருந்தும் 'மவுதாயி', விருந்தில் முக்கிய இடம்பிடித்தது. ஆண்டுதோறும் நான்கு முறை இரு நாட்டு இராணுவத்தினரும் எல்லையில் சந்தித்து இதுபோல வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். சீனத் தரப்பில் ஒக்டோபர் 1 மற்றும் மே 1 (தொழிலாளர் தினம்) இப்படி வாழ்த்தும் வரவேற்பும் நடைபெறுகிறது. இந்திய வீரர்கள் ஆகஸ்ட் 15, ஜனவரி 26 ஆகிய இரு நாட்களில் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்கின்றனர். 1990ற்குப் பிறகு, இரு நாடுகளின் ராணுவங்களும் இப்படி 84 முறை சந்தித்துள்ளன என்பதிலிருந்தே சுமுக நிலையைத்தான் இரு தரப்பும் விரும்புகின்றன என்பது புரியும்.

இராணுவ — பொருளாதார வல்லரசாக சீனா இருந்த காலத்தில் இந்தியாவை அச்சுறுத்திய மாதிரி இனியும் அச்சுறுத்த முடியாது என்ற உண்மையை இப்போது புரிந்துகொண்டுள்ளது. இந்த நிலையில்தான் சீன அதிபர் ஜி ஜின்பிங்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மாமல்லபுரத்தில் சந்தித்துப் பேசவிருக்கின்றனர். இவ்விரு தலைவர்களுக்கு இடையிலான உச்சி மாநாடு இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றத்தைத் தணித்து நட்புறவுக்கு வலுசேர்க்கக்கூடும். சர்வதேச அரங்கில் வெவ்வேறு பகுதிகளில் நிலவும் சமூக, பொருளாதார, இராணுவ நிலை மாற்றங்கள் இந்தியா, சீனா இரண்டுக்குமே நேரடியாகத் தொடர்பில்லாதவை என்றாலும் கவனிக்கப்பட வேண்டியவை.

## வலுப்படும் உறவு

இந்தியாவைச் சுற்றியுள்ள இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம், மியன்மார் போன்ற நாடுகளுக்குச் சீனா கடன் கொடுத்து, அங்கே இராணுவத் தளங்களை அமைத்தாலும் இந்தியா அஞ்சவில்லை. அதேசமயம், சீனாவுக்கு எதிரான நாடுகளுடனான உறவை வலுப்படுத்தி பதில் நடவடிக்கையை எடுத்துவருகிறது. 2018 ஏப்ரல் 18இல் ஊஹான் என்ற சீன நகரில் ஜி ஜின்பிங், பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்று உச்சி மாநாடு நடத்தினார். ஊஹான் என்பது சீனாவின் புதிய தொழில் நகரம். அதன் செழிப்பைக் காட்டுவதன் மூலம், தங்களுடைய பொருளாதார வலிமையைக் காட்டினார் ஜி ஜின்பிங். நரேந்திர மோடியோ சீனாவுக்கும், இந்தியாவுக்கும் பண்டைக் காலத்திலிருந்தே வாணிப, கலாச்சார, கல்வித் தொடர்புகள் இருந்ததை உணர்த்தும் விதத்தில் மகாபலிபுரத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

இந்த மாநாட்டுக்கு விவாதப் பட்டியல் ஏதும் வகுக்கப்படவில்லை. இரு தலைவர்களும் தாங்கள் விரும்பும் தலைப்புகளில் ஆலோசனைகளை நடத்துவார்கள். காஷ்மீரின் அந்தஸ்தைக் குறைத்தது சரியல்ல என்று சீன அரசின் சார்பில் ஆட்சேபம் தெரி—வித்திருந்தாலும், இந்த உச்சி மாநாட்டில் அதைப் பற்றி இருவரும் பேச மாட்டார்கள் என்று தெரிகிறது. அடுத்த ஐந்தாண்டுகளில் இந்திய — சீன இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த என்னென்ன செய்யலாம் என்று இருவரும் செயல்திட்டம் வகுக்கவும் வாய்ப்பிருக்கிறது.

## முடிவற்ற போர்களில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட முடியாது - டிரம்ப்

முடிவற்ற போர்களில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்க முடியாது என அந்நாட்டு அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிரான போரில், குர்து போராளிக் குழு படைகள் அமெரிக்கப் படைகளுடன் இணைந்து செயல்பட்டன. ஆனால் குர்து படைகளை தீவிரவாதக் குழுவாகக் கருதி துருக்கி அவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

அந்தப் பகுதிகளில் இருந்து அமெரிக்கா தனது வீரர்களை விலக்கிக் கொண்டதை தொடர்ந்து, துருக்கி படைகள் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளன. குர்து படைகளை அமெரிக்கா கைவிட்டுவிட்டதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்நிலையில் வாஷிங்டனில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அதிபர் டிரம்ப், படைகளை திரும்பப் பெற்ற விவகாரத்தில் தான் தனித் தீவு போன்று ஒதுக்கப்பட்டுவிட்டதாக டிரம்ப் தெரிவித்துள்ளார்.

முடிவற்ற போர்களில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்க முடியாது என்று கூறியுள்ள அவர், தங்களின் மிகப்பெரிய சுதாநாயகர்களான அமெரிக்கப் படை வீரர்களை திரும்ப அழைத்துக்கொள்ள நேரம் வந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

## ஜப்பானை நிர்மூலமாக்கிய புயல்



டோக்கியோ : ஜப்பானில் ஹகிபிஸ் புயல் தாக்கியதில் 60 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கனமழை பெய்து வருகிறது. இதனால் பல இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜப்பானில் கிழக்குக் கடற்கரையை நோக்கி ஹகிபிஸ் புயல் மணிக்கு 225 கிலோ மீற்றர் வேகத்தில் நகர்ந்து வருகிறது. இதனால் கனமழை, வெள்ளம், நிலச்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 17 பேர் மாயமாகி உள்ளனர்.

70 இலட்சம் பேர் வீடுகளை விட்டு வெளியேறும்படி அரசு கேட்டுக் கொண்டுள்ளது. 50,000 பேர் இதுவரை முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ரயில் மற்றும் விமான சேவை முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது.

ஒரே இரவில் மட்டும் வெள்ளத்தில் தத்தளித்த 1417 பேர் மீட்கப்பட்டுள்ளதாக மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இன்னும் எத்தனை பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற விபரம் தெரியவில்லை என கூறப்படுகிறது. கனமழையால் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, வெள்ளநீர் குடியிருப்பு பகுதிகளுக்கும் புகுந்துள்ளது.

அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் உலகக் கோப்பை போன்ற விளையாட்டு போட்டிகளும் ரத்து செய்யப்பட்டுள்ளது. புயல் வலுவிழக்க வாய்ப்புள்ளதால் மழை அளவு அதிகரிக்கும் என்பதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும் படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## கொலையை ஒப்புக்கொண்டாரா சவூதி இளவரசர்?



ஓராண்டு நிறைவுற்றும், ஓயாமல் எரிந்து கொண்டிருக்கிறது பத்திரிகையாளர் ஜமால் கஷோகியின் மரணச் செய்தி. 2018 ஒக்டோபர் 2ஆம் தேதி, துருக்கியின் சவூதி தூதரகத்தில் அவர் கொல்லப்பட்டது, மனித உரிமைக்கும், கருத்து சுதந்திரத்துக்கும் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல். சரியாக ஓராண்டு கழித்து இந்தக் கொலைச் சம்பவத்தில் சவூதி இளவரசருக்கு நெருக்கமான தொடர்பு இருப்பதற்கான முகாந்திரங்களை உண்மைக்கு வெகு அருகில் பதிவுசெய்துள்ளார், `ஃப்ரன்ட்லைன்' பத்திரிகையாளர் மார்ட்டின் ஸ்மித்!

ஜமால் கஷோகி, பிரபல பத்திரிகையாளர். சவூதியைச் சேர்ந்த இவர், தொடக்கத்தில் சவூதி இளவரசர் முகமது பின் சல்மானின் ஆதரவாளர். பிறகு ஏற்பட்ட முரண்பாடுகளால், அவரை கடுமையாக விமர்சித்து எழுதினார். ஒருகட்டத்தில், நெருக்கடிகளால் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்து, `வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் பணியாற்றினார். சவூதி இளவரசர்மீது அவர் தொடர்ந்த கடுமையான விமர்சனங்களே, அவருக்கு கொடூரமான மரணம் ஏற்பட காரணமாக அமைந்துவிட்டன. தன் திருமணம் தொடர்பாக சில ஆவணங்கள் பெற, துருக்கியில் உள்ள சவூதி தூதரகத்துக்குச் சென்ற ஜமால் கஷோகி, கடும் சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டார். இதை முதலில் மறுத்த சவூதி அரசு, பிறகு ஒப்புக்கொண்டு கண்துடைப்பாக விசாரணையைத் தொடங்கியது. சவூதி இளவரசரின் நேரடி ஆணையின் பேரிலேயே இந்தக் கொலை நடந்ததாக ஆதாரங்களை வெளியிட்டது துருக்கி அரசு. தொடர்ந்து, கொலை தொடர்பாக ஐ.நா விசாரணைக்கு உதவிசெய்யும் பிரிட்டிஷ் வழக்கறிஞர் ஹெலினா கென்னடி, கொலை நடந்த அன்று தூதரகத்தில் கிடைத்த சில ரகசிய டேப்களில், தான் கேட்ட விடயங்களைப் பகிர்ந்துள்ளார் முகமது பின் சல்மான்.



ஜமால் கஷோகி

'பலிகொடுக்கும் விலங்கு வருகிறது' என்று தொடங்கி `உடல் மற்றும் இடுப்புப் பகுதி இந்தப் பைக்குள் நுழையாது' என்பது வரை அந்த ஒலிப்பதிவில் பல விவரங்கள் இருக்கின்றன. ஐ.நா விசாரணை ஆணையகத்திடமும் இந்த டேப் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தக் கொலையைப்பற்றி விசாரணை நடத்திய ஐ.நா விசாரணை ஆணையகம், `இது திட்டமிடப்பட்ட கொடூரமான கொலை. சவூதி இளவரசருக்கும், இந்தக் கொலைக்கும் தொடர்பு இருப்பதற்கான வலுவான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இளவரசரை விசாரணை செய்ய வேண்டும்' என்று அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. இவையெல்லாம் முன்விவரங்கள்.

ஜமால் கொலையின் ஓராண்டு நிறைவையொட்டி பத்திரிகையாளர் மார்ட்டின் ஸ்மித் சமீபத்தில் வெளியிட்ட ஆவணப்படம்தான், சர்வதேச அரங்கில் தற்போது பரபரப்பைப் பற்றவைத்துள்ளது.

சல்மானின் வளர்ச்சி முதல் ஜமால் கொலை வரை விவரிக்கப்பட்டுள்ள இந்த இரண்டு மணி நேர ஆவணத்தில் சல்மான், `அந்தச் சம்பவம், நான் பொறுப்பில் இருக்கும் போதுதான் நடந்தது. அதற்கான அனைத்து பொறுப்புகளையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்று தன்னிடம் சொன்னதாக மார்ட்டின் ஸ்மித் சொல்கிறார்.

ஆனால், இதுதொடர்பாக சி.பி.எஸ் நியூஸ் தொலைக்காட்சிக்கு சல்மான் அளித்த பேட்டியில், "ஜமால் கொலைக்கும், எனக்கும் சம்பந்தம் இல்லை. சவூதியின் மூன்று மில்லியன் பிரசைகளின் வாழ்விலும் தினசரி என்ன நடக்கிறது என்பதை நான் அறிந்திருக்க முடியாது. இந்தக் கொலை தொடர்பான விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவர்" என்று சொல்லியிருக்கிறார்.

மார்ட்டின் ஸ்மித்தோ, "சவூதி உளவுத்துறை அதிகாரி மஹர் முட்ரெப், கொலை நடந்த அன்று 'காரியம் முடிந்துவிட்டது என்று தலைவரிடம் சொல்லுங்கள்' என்று சொல்லியிருக்கிறார். அவர் தொடர்பு கொண்டது இளவரசரின் அலுவலகம். இதைவிட வேறென்ன சாட்சி வேண்டும்?" என்று கேட்கிறார்.

மேலும், "அரசை விமர்சித்த ஒரே காரணத்துக்காகச் கொல்லப்பட்டது மட்டுமல்ல பிரச்சினை... சமஉரிமை கேட்டதற்காக சிறையில் வாடும் பெண்கள் சவூதியில் இருக்கிறார்கள். கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், தொழிலதிபர்கள் எனக் கேள்வியெழுப்பிய பலரும் சிறைக் கம்பிகளுக்குப் பின் இருக்கிறார்கள். ஜமாலின் கொலை, சவூதியை உற்றுநோக்க ஒரு ஜன்னலைத் திறந்திருக்கிறது. இனி அதைப் பயன்படுத்தி அங்கு என்ன நடக்கிறது என்பதைக் கண்டறிவது நமக்கான வேலை" என்று இருளினுள் ஒடுக்கப்பட்ட சவூதி மக்களின் வாழ்வின்மீது வெளிச்சம் பாய்ச்ச அறைகூவல் விடுத்திருக்கிறார் மார்ட்டின் ஸ்மித். பத்திரிகையாளரின் கடமையைச் சரியாகச் செய்திருக்கிறார் மார்ட்டின் ஸ்மித்!

# சிரியாவில் குர்தீஷ் போராளிகள் தாக்குதல் துருக்கி இராணுவத்தினர் 75 பேர் பலி

சிரியாவில் குர்தீஷ் போராளிகள் நடத்திய அதிரடி தாக்குதலில் துருக்கி இராணுவ வீரர்கள் 75 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியா மற்றும் துருக்கி நாடுகளின் எல்லை பகுதியில் பதற்றம் நிறைந்த சூழ்நிலை எழுந்துள்ளது. சிரியா நாட்டின் வடகிழக்கு எல்லை பகுதி துருக்கி நாட்டின் எல்லையையொட்டி அமைந்துள்ளது. இங்கு குர்திஷ் போராளிகள் தலைமையிலான சிரிய சனநாயக படையினர் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்களுக்கு அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படை ஆதரவு அளித்து வந்தது. இந்நிலையில், மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்க இராணுவ தலையீட்டுக்கு கண்டனம் தெரிவித்து கொண்ட அதிபர் டிரம்ப், படைகள் வாபஸ் பெறப்படும் என கடந்த புதன்கிழமை கூறினார். கடந்த வருடங்களில் ஆயிரக்கணக்கான வீரர்களை நாங்கள் இழந்து விட்டோம். கோடிக்கணக்கான பணமும் செலவிடப்பட்டு விட்டது என தனது நடவடிக்கையை டிரம்ப் நியாயப்படுத்தினார். இதனால் சிரிய சனநாயக படை, அமெரிக்க இராணுவ ஆதரவின்றி போனது.

இதனை தொடர்ந்து, சிரியாவின் வடகிழக்கு எல்லை பகுதியில் உள்ள குர்திஷ் போராளிகளை விரட்டியடிக்கும் இராணுவ நடவடிக்கைகளை துருக்கி தொடங்கியது. இதனிடையே, வடகிழக்கு எல்லை பகுதியில் துருக்கி இராணுவ வீரர்கள் மீது குர்தீஷ்



போராளிகள் தலைமையிலான சிரிய சனநாயக படையினர் அதிரடி தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் துருக்கி நாட்டின் 75 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். 19 பேர் காயமடைந்தனர். இரு நாடுகளின் எல்லை பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற சூழ்நிலைக்கு இந்தியா உட்பட உலக நாடுகள் வருத்தம் தெரிவித்து உள்ளன.

## சிரியாவில் மூன்றே நாளில் 1 இலட்சம் பேர் வெளியேற்றம், 4 இலட்சம் பேர் இடம்பெயரக்கூடும்: ஐ.நா அச்சம்



வடகிழக்கு சிரியாவில் குர்து படையினர் மீது துருக்கி கொடூரமான தாக்குதல் நடத்திவருவதால் கடந்த மூன்று நாட்களில் 130,000 மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற நேரிட்டுள்ளது என்று ஐ.நா தெரிவித்துள்ளது. அமெரிக்க சனாதிபதி டொனால்ட் டிரம்ப் அமெரிக்க படைகளை எல்லையிலிருந்து பின்வாங்குமாறு கட்டளையிட்டதை அடுத்து, கடந்த புதன் கிழமை துருக்கியின் இராணுவ ஊடுருவல் தொடங்கியது. இதனால் சுமார் 100,000 மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக ஐ.நா வெள்ளிக்கிழமை கூறியிருந்தது.

சிரியாவின் வடக்குப் பகுதியில் குர்து படையினர் மீது துருக்கி நான்காவது நாளாக தாக்குதல் நடத்தி வருகிறது. தற்போது 130,000 மக்களை தங்கள் வீடுகளை விட்டு வெளியேற நிர்பந்தித்துள்ளது. இந்த எண்ணிக்கை இன்னும் வேகமாக அதிகரிக்கும் என்று ஐ.நாவின் மனிதாபிமான நிறுவனமான �ளிசிபிகிவின் செய்தித் தொடர்பாளர் ஜென்ஸ் லர்கே அச்சம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து செய்தித் தொடர்பாளர் ஜென்ஸ் லர்கே ஏ.எப்.பியிடம் கூறியதாவது:

"பாதிக்கப்பட்ட பகுதிகள் முழுவதிலுமிருந்து கடந்த மூன்று நாட்களில் 1 இலட்சத்திற்கும் அதிகமானோர் வெளியேறினர். இன்று மேலும் வெளியேறி வருகின்றனர். இதேநிலை தொடர்ந்து உள்ளதால் 4 இலட்சம் பேர் இடம்பெயரக்கூடிய ஒரு மோசமான சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த மக்களுக்கு உடனடியாக பாதுகாப்பும், உதவியும் தேவைப்படுகிறது.

இன்றுள்ள சூழ்நிலையில் டெல் அபியாட் மற்றும் ராஸ் அல்ஜனைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் இருந்து மக்கள் உடனடியாக வெளியேறுமாறு அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இதனால் தற்போது வெளியேறியுள்ள மக்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 30 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கையும் துல்லியமானதில்லை. அதைவிட அதிகமாக இருக்கவே வாய்ப்புள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சமூக மற்றும் உறவினர்களின் வீடுதேடி அலைகின்றனர். பெரும்பாலோனோர் பாடசாலைகளிலும், கூட்டு முகாம்களிலும் சென்று தஞ்சமடைந்து வருகின்றனர். துருக்கியின் தாக்குதல் இப்படியே தொடர்ந்தால் பிரதேசத்தின் கட்டுப்பாட்டில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம்.

பல்வேறு (இடப்பெயர்ச்சி) முகாம்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் எதிர்கொள்ளும் அபாயங்கள் குறித்து தீவிரமான கவலைகள் ஏற்பட்டுள்ளன.

துருக்கிப் படையினரின் எல்லையில் பல முனைகளில், இராணுவத் தாக்குதலுக்கு இன்னும் ஏராளமான மனித இழப்புகள் ஏற்படும். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களை ஒப்பிடும்போது அவர்களுக்கு சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. ஐ.நா மற்றும் இப்பகுதியில் செயல்படும் பிற சர்வதேச உதவி அமைப்புகள் 113 உள்ளன. இந்த அமைப்புகளின் சார்பாக ஏற்கனவே 384 பேர் இருந்தனர். தற்போது 200 ஆக குறைந்துள்ளது. இவர்களின் பாதுகாப்பு குறித்தும் கவலைகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு ஐ.நா செய்தித் தொடர்பாளர் ஜென்ஸ் லர்கே தெரிவித்துள்ளார்.

## சட்டத்தின்படியே புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தோர் கைது

### மலேசியா பிரதமர் மகாதீர்

சட்டத்தின் அடிப்படையில்தான் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர யாரையும் பலவீனப்படுத்த அல்ல என மலேசியாப் பிரதமர் மகாதீர் விளக்கம் அளித்திருக்கிறார். விடுதலைப் புலிகள் இயக்கத்தை உயிர்ப்பிக்கவும், நிதி திரட்டவும் ஆதரவு தெரிவித்த 12 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலேசியாவில் பெரும் புயலை கிளப்பியிருக்கிறது இது. இந்நடவடிக்கை குறித்து பிரதமர் மகாதீர் கூறுகையில், இக்கைது



நடவடிக்கையானது முழுவதும் காவல்துறையினரால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. சட்டத்தின் அடிப்படையில்தான் நடைபெற்றது. இதில் அரசு எந்த விதத்திலும் தலையிடவில்லை. எந்த ஒரு தரப்பையும் பலவீனப்படுத்த வேண்டும் என்கிற நோக்கம் எதுவும் இல்லை என்றார். முன்னதாக வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த விவகாரம் எழுப்பப்பட்டிருக்கிறது.

அதில் 2 அமைச்சர்கள் காவல் துறையினரின் நடவடிக்கையை கடுமையாக விமர்சித்திருக்கின்றனர். இந்த கைது நடவடிக்கை குறித்து அமைச்சர் வேதமூர்த்தி கூறுகையில், இப்பிரச்சனையில் உண்மை என்ன என்பது நீதிமன்றத்தில் தெரியவரும் என்றார்.

# புலிக்குகை தெரியுமா?



தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களில் மிக முக்கியமானது காஞ்சி புரம் மாவட்டத்தில் உள்ள மாமல்லபுரம். இது, ஏழாம் நூற்றாண்டில் பல்லவர்களின் முக்கியத் துறைமுகமாக இருந்ததாக ஆராய்ச்சியாளர்களால் சொல்லப்படுகிறது. இந்த துறைமுக நகரத்தை மேம்படுத்த மகேந்திரவர்மனின் மகன் நரசிம்மவர்ம பல்லவன் சிறப்புக் கவனம் செலுத்தியதாக சொல்லப்படுகிறது.

இவரது சிறப்புக் பெயர்களில் ஒன்று மாமல்லன். இவர் சிறந்த போர் வீரர் என்பது மட்டும்மல்லாமல் சிறந்த வீரனாகவும் இருந்திருக்கிறார். அதனால் இந்த நகரத்திற்கு மாமல்லபுரம் என்று பெயர் வந்தது என்றும், அது காலப்போக்கில் மகாபலிபுரம் என்று அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

சென்னையில் இருந்து மாமல்லபுரம் செல்லும் கிழக்குக் கடற்கரை பாதையில் சாளுவன் குப்பம் என்ற கிராமம் உள்ளது. அப்போதைய பெயர் திருவிழிச்சில். இங்கேதான் யுனஸ்கோ சின்னங்களில் ஒன்றான "புலிக்குகை" உள்ளது. புலிக் குடைவரை அல்லது புலிக்குகை என்றும் சொல்லப்படுகிறது. தமிழகத்தில் 2004ஆம் ஆண்டு வந்த சுனாமியால் நடந்த ஒரே நல்ல விஷயம் இந்த புலிக்குகை என்கின்றனர். இது சாதாரண கட்டிடம் அல்ல. தமிழகத்திலேயே இதுவரை கண்டுபிடிகப்பட்டுள்ள மிகப்பழமையான கோயிலில் முதல் இடம் பிடித்திருப்பது இதுதான் என்கின்றனர் தொல்லியல் அறிஞர்கள்.

அடித்தளத்தில் இருக்கும் செங்கல் கட்டுமானம், சங்க காலத்தை சேர்ந்தது. இந்த செங்கற்கள் சங்க கால இடங்களான பூம்புகார், உறையூர், மாங்குடி, அரிக்கமேடு ஆகியனவற்றில் கிடைக்கப்பெற்ற கற்களோடு ஒத்துப்போவதாக சொல்லப்படுகிறது. செங்கற்கள் ஒவ்வொன்றும் தற்போதைய அளவை விட இரண்டு மடங்கு பெரியதாகவும் உள்ளது.

## சனிக் கிரகத்திற்கு நிலாக்கள் கூடுகின்றன

அண்மைய விண்வெளி ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகளையடுத்து, விண் கற்களால் ஆன வளையத்தைக் கொண்டிருக்கும் சனிக் கிரகத்தை சுற்றி வரும் துணைக் கோள்களின் எண்ணிக்கை, 62 ஆக இருந்தது. உலகெங்கும் உள்ள விண்வெளி ஆய்வாளர்கள் தொடர்ந்து புதிய நிலவுகளை கண்டுபிடித்து வருகின்றனர். இவர்கள், 20 புதிய நிலவுகளை தற்போது கண்டுபிடித்துள்ளனர்.

இதனால், சனிக் கிரகத்தைச் சுற்றிவரும் துணைக் கோள்களின் எண்ணிக்கை, 82 ஆக உயர்ந்துள்ளது. சில மாதங்கள் முன்பு வரை, அதிகமான துணைக் கோள்களைக் கொண்ட கிரகமாக இருந்தது வியாழன் கிரகம் தான். இதை, 79 துணைக் கோள்கள் சுற்றி வருகின்றன. அடுத்தடுத்து சனிக்கிரகத்தைச் சுற்றி துணைக்கோள்கள் கண்டுபிடிக்கப் பட்டதால், அவற்றுக்கு பெயர் சூட்ட ஒரு போட்டியை அறிவித்திருக்கிறது அமெரிக்காவிலுள்ள கார்னகி மெலன் பல்கலைக்கழகம்.


## ஒளிந்திருப்பவரை கண்டறியும் வைஃபை



ஒரு கட்டடத்தில், நான்கு சுவர்களுக்குள் யாராவது மறைந்திருக்கிறார்களா, எத்தனை பேர் மறைந்துள்ளனர் என்பதை கண்டறிய, அன்றாடம் பயன்படும், 'வைஃபை' சமிக்ஞைகளை வைத்தே கண்டறியலாம். இதற்கான புதிய தொழில்நுட்பத்தை அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். கிராஸ் மாடல் ஐ.டி எனப்படும் இந்த தொழில்நுட்பம் சந்தேகத்திற்குரிய அறையின் சுவர்களை நோக்கி வைஃபை சமிக்ஞை செலுத்தி மற்றும் சமிக்ஞை வாங்கி ஆகிய கருவிகள் பொருத்தப்படும்.

அந்த சமிக்ஞை சுவர்களைக் கடந்து செல்லக்கூடியவை. அதே சமயம் அவை குறுக்கிடும் பொருட்கள், நபர்களால் சிறிது பலவீனமும் அடையும். இந்த விகிதத்தை வைத்து, அறைக்குள் நபர்கள் இருக்கிறார்களா? எத்தனை பேர்? என்பதை அறிய முடியும். இன்னும் ஒருபடி மேலே போய், கண்காணிப்பு கமராவில் பதிவானோரின் நடையையும், அறைக்குள் இருப்போரின் நடையையும் ஒப்பிட்டுப் பார்த்து, இந்த நபர்தான் அறைக்குள் பதுங்கியிருக் கிறார் என்பதையும் கண்டறிய கிராஸ் மாடல் ஐ.டி தொழில்நுட்பம் உதவும். இதைத் தீவிரவாத தாக்குதல் முதல், நகைக் கடை திருட்டு வரை பலவற்றிலும் குற்றவாளிகளைக் கண்டறியப் பயன்படுத்தலாம்.

## மிகவும் விஷத்தன்மை வாய்ந்த காளான்



அவுஸ்ரேலியாவில் உள்ள மழைக்காடுகளில் கொடிய விஷத்தன்மை உள்ள காளான் கண்டறியப்பட்டுள்ளது.

தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய பகுதிகளில் வளரும் மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்த காளானை காட்டிலும், அவுஸ்ரேலியாவின் வடக்குப் பகுதியில் கண்டறியப்பட்ட ஃபயர் கோரல் காளான் கொடிய விஷத்தன்மை உள்ளதாக ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய விஷத்தன்மை உடைய காளானை உட்கொண்டால் வயிற்றுவலி, வாந்தி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல், கை கால்களில் தோல் உரிதல், மூளை சுருங்குதல் உள்ளிட்ட உபாதைகள் ஏற்படும் என்று அறியப்பட்டுள்ளது. இயற்கையாக அவுஸ்ரேலியாவின் வடக்குப்பகுதியில் வளர்ந்துள்ள இந்த வகை காளான்கள் இந்தோனேசியா, பப்புவா உள்ளிட்ட பகுதிகளில் காணப்படுவதாகவும் தகவல்கள் பதிவாகியுள்ளன.